சிவமயம்.

திருவிடைமருதூர் உலா.

இஃது
திருக்கைலாய பரம்பரை
திருவாவடுதுறை ஆதீன வித்துவான்
திரிசிரபுரம்
மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களால்
இயற்றியது.

உறையூர்
மதுரைநாயகமுதலியாரவர்கள்
குமாரர்
சொக்கலிங்க முதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு,

தஞ்சாவூர் இஞ்சினீராபீஸ் கிளர்க்கு
த. இ. மகாதேவபிள்ளையவர்கள்
வேண்டுகோளின்படி,

திருப்பரங்குன்றம்
அருணாசலசரணர்
குமாரர்
நாராயணசரணரால்,

தஞ்சை
"பூரணச்சந்திரோதய அச்சுக்கூடத்திற்"
பதிப்பிக்கப்பட்டது.

சார்வரி-ஞ் 1901

சிறப்புப்பாயிரம்.

௳

இந்நூலாசிரியர் மாணாக்கராகிய
சி. தியாகராசசெட்டியாரவர்கள் இயற்றியது.

பூமேவு மடமாதர்களம்பொலிய வோரளபுபொலியமுன்சேர், நாமேவு களங்களத்தி லமைத்தவிடை மருதவன நாதன் சீர்கோ, டேமேவு மூலாச்சிறப்பை விளக்கு மூலாவைப்புலவோர் செவிவிருந்தா, மாமேவுமீனாட்சிசுந்தரநாவலரோறுமகிழ்ந்துசெய்து. (க)

பொன் பூத்தஞானவளம்பொலியவாவடுதுறையிற் பொலிந்துமேவு, மன்பூத்த வருணமச்சிவாயகுருசாமி பதமலர்கள்பூத்த, தென்பூத்தவுளத்தடத்தன்சிவஞானமுனிவர்பிரான்றிலகமாகக், கொன்பூத்த பேரவையம் பெருங்களிமூழ்குறவிரித்துக்கூறினனே. (உ)

திருப்பரங்குன்றம்
அ. ரு. நாராயணசரணராலியற்றியது.

அன்னமிறைகொள்வயல்சூழ்ந்தோங்குதிரு விடைமருதூர்க்காரேறொடொன்று, தன்னுபருவங்களுட னெழிலமையவுலாவெனுநூல்சொற்றான் மூன்று, மன்னுவிழியின்னுசடைப்பரமனடிமறவாதவாய்மைபூண்டோன், பன்னகவேந்தனும்புகழுமீனாட்சிசுந்தரனும்பாவல்லோனே. (க)

அப்பெருஞ்சீருடையவுலாவகில மெங்கும்பரந்தோங்கவச்சிலேற்றத், தப்பருநல்வளமுடையதிருக்குருகூர்ஞானசித்தசாமிதன்பால், மெய்ப்புகழார்ந்தோங்குதிருச்சன்னிதிமுன்விதரணையாய்மேலோர்போற்றச், செப்பருஞ்சீர்மணிமந்திரவிள்தமொடுயோகமுதற்றெளிவார்ஞானம். (உ)

எனுமைந்து கிருத்தியங்களுடன்கூட வெழினன்குவேதந்தன்னைத், தினமுந்தியோதிவருஞ் செவ்வாயான்றிருவானைகாவில்வாழ்வோன், மனமுந்திநினைக்குமுனங் கொடைகொடுக்குங் கரதலத்தமா சேஷய்ய, ருனவந்துவ வதரித்தநாயனார்குறளிடையையுதவினரோ. (௩)

உ

சிவமயம்.

திருவிடைமருதூர் உலா.

ஆண்டபிள்ளையார் துதி.

சீருலாவான்றோர்செவிக்கணிடைமரு
தூருலாவேறவொளிதரும்பை, யேருலவப்
பூண்டமாதங்கமதுப்பூங்கொன்றையாரளித்த
வாண்டமாதங்கமது

நூல்.

பூமேவுநான்முகத்துப்புங்கவனுஞ்செங்கமல
மாமேவுமார்பமணிமாயவனுங், கோமேவு (1)
மிந்திரனும்வானேருமேனேருமின்பமுற
வைந்துதொழிலாற்றுமருட்கொண்மூ, வைந்துதொழில்(2)
சந்ததமுஞ்செய்துந்தனக்கோர்தொழிலில்லா
னந்தமலையனாயனன்கீன்ற, சுந்தரப்பொற் (3)
கன்னியொருபாற்கலந்தும்விகாரமிலான் [ண்
முன்னியெவற்றுந்தோய்ந்துந்தோய்விலான், முன்னியம
ஞாதியுருவெட்டுமெத்துவாவுருவோராறுமிருண்
மோதியவைந்தொழிற்குமூலமாய்ச், சோதி (5)
யுருமுருவொன்பானுமுற்றுமோருருவுமில்லான்
மறுவின்மறையாதிவகுத்தோன், பெறுநெறியே (6)
யாமுயிர்க்கேயின்பமருத்திநெறிதப்பிப்
போமுயிர்க்கேதுன்பம்புணர்த்துவோ, ஞம (7)
விருள்கேவலத்தினிணர்த்தருவிற்றீயாய்த்
தெருள்சேரிடையிற்கற்றீயா, யருள்சேருஞ் (8)

சுத்தத்திற்காரிரும்பிற்றேய்தீயேயாய்நிற்போ
னெத்தத்துவங்கட்குமெட்டாதான், முத்தன்றன் (9)
வாமத்தைப்பூமேவுமாதர்கடொட்டுப்புனைய
நாமத்தைச்செய்விடமுன்னாளயின்றோ, னேமத்தன் (10)
சொல்லமுதைப்பாகுவந்துதோயவைத்தோன்கைப்பகழி
வில்லமர்பூநாரிதனைமேவவைத்தோ, னல்லற் (11)
சிறுவிதியாகத்திற்றினகரற்குமுன்னங்
குறுகியிருள்கூடவைத்தகோமான், றெறுபசியால் (12)
வந்தழுதசேயின்வருத்தந்தெரிந்தமுது
தந்தமடைப்பள்ளிதனைக்கொடுத்தோன், கந்த (13)
மலர்மலனொன்றுன்னுமதன்மெய்குளத்து
ளலர்கட்கமலத்தழித்தோன், பலர்வெருவத் (14)
தோற்றுந்தொழினஞ்சுதந்திரமன்றென்றெண்ணாக்
கூற்றுயிருண்டகுரைகழலான், சாற்றும் (15)
பிரணவத்தின்மேயோர்பிரமன்மாலென்பார்
முரணவிக்குங்கொன்றையந்தார்முன்னோ,னரணவனை (16)
மண்வைத்தருக்கிவளைவைத்தசெங்கைமால்
கண்வைத்துங்காணக்கழலினா, னெண்வைத்துக் (17)
கண்கையிடந்துகொலைகண்ணுபுகொள்ளாமல்
வண்கையிடங்கொண்டவசிவாய்ப்படையா,னெண்கவினார்
தன்னிரதம்பாதலத்துத்தான்புக்கழுந்தாமன்
மன்னிரதநீர்வேணிவைத்தபிரான், றன்னுகணை (19)
வாளியெளிதீர்தரப்பின்வாளிலங்கைமன்னனைமுன்
றாளின்விரனுதியாற்றானடர்த்தோ, னாளும் (20)
புணருமடியார்புரிபிழையுமேனோர்
குணமுமிகந்தகுணக்கோமான், மணமலிபூங் (21)
காவின்மயிலேத்தவருகண்ணணாமாலென்றுநினைத்
தோவினடஞ்செய்கயிலையோங்கவிடை, மேவிநல (22)
மாவித்தகத்துவயங்காகமமுழுதுந்
தேவிக்குபதேசஞ்செய்தருள, மாவிற்கண் (23)
ணன்னமயின்மண்ணுலகையான்றெரியுமாகாட்டி
யின்னலறநீவீற்றினிதிருக்க, நன்னயவி (24)

சேடதலமுந்தெரித்தருளவேண்டுமெனச்
சூடகச்செங்கைத்துணைகூப்ப, வாடமைத்தோ (25)

ணங்காய்நன்றென் றுநனையேற்றின்மீமிசைமற்
றங்காதலியோடமர்ந்தருளிப், பங்காளுங் (26)

கோதாய்காண்கென் றுகுவலயமுற் றுந்தெரித்து
மேதாவியர்புகழுமேன்மைபுனை, போதாருங் (27)

காவிரியுங்கோட்டுவளக்காவிரித்தென்பாற்பொலியும்
வாவியிடைமருதூர்வாய்மேவ, வேவியநேர் (28)

மின்னையுமாதவனும்வேதனுங்காணாத
தன்னையுநாடிவந்ததன்மைபோற், பன்னுபுகழ் (29)

வாகீசர்போலவருந்தித்தமிழ்நாட்டி
ரேகினெனவந்திறுத்ததுபோல், வாகார் (30)

திருப்புவனமுற்றுஞ்செழுமறைகள்யாவும்
விருப்புமிகநின்றேத்தும்வெள்ளிப், பொருப்புப் (31)

பெருவளவர்நாட்டின்பெரும்புண்ணியத்தா
லொருமருதமாகியவணுற்ற, தருமையத (32)

னன்னிழற்கண்வானினனையேற்றினைநிறுவித்
தன்னிடநீங்காத்தலைவியைப்பார்த், தின்னகையாய் (33)

மேவுறுநன்பூமிகவுகுத்துவிண்ணுலகைப்
பூவுலகாக்கும்பொழில்பாராய், தாவிமிசைப் (34)

பொங்கவுரிஞிப்பொற்பொடிவீழ்த்துபுமண்ணைப்
பங்கமில்பொன்னுக்கும்விடபம்பாரா, யெங்குநின்மெய்க்

காமரொளிபாய்தவிற்கார்காலமெனக்கருதி
மாமையினன்காடுமயில்பாராய், பூமருநஞ் (36)

சேயொளியாற்பைந்தழைகள்சேப்புறவேனிலென்று
கூயமருந்தேமாங்குயில்பாராய், மேயவிரு (37)

நம்மேனியொன்றியெனநன்கொருபாற்சேர்ந்தொருபாற்
பைம்மேனியாமாம்பழம்பாரா, யம்மபுவிக் (38)

கான்முனிவன்மைந்தன்முதற்காணுமுழுமுனிவர்
மான்முதனீத்தாற்றிடுதவம்பாராய், பான்மொழியே (39)

யென்றுகாட்டத்தனிகாணெவ்வுலகுமீன்றாளுக்
கொன்றுமகிழ்வாற்கணுறைதுளிப்ப, வன்றதுமுற் (40)

காணுந்திசையோடிக்காருணியாமிர்தமென்
பூணும்பெயரிலகப்பூண்டதன்மேற், கோணிலவு (41)

சூடியதன்கண்கள்சொரிநீரிருகூறு
யோடிவடமேற்குதக்கெதிருங், கூடுதடத் (42)

துட்போய்விழமுனுல்ர்ந்தசல்சரங்கா
னட்பாம்விதிக்குநறுந்தடத்துப், பெட்பா (43)

முருத்திரராகியெழுந்தொண்மலர்த்தாள்போற்றிப்
பெருத்தசிவலோகமுற்றபின்னர்த், திருத்தவண்வாழ் (44)

தண்முனிவர்முன்புதமிழ்மணக்குஞ்செங்கனிவாய்
வண்முனிவன்வந்துதவமாமுனிவீர், கண்ணொருமூன் (45)

றுற்றபுகழ்ச்செய்யகரும்புங்கையுறும்பைந்தோகை
பற்றிமுயனாமென்றப்பாற்போக, வெற்றி (46)

முனிவரரவ்வாறெம்முதல்வியைநோக்கிப்
புனிததவம்புரியும்போது, நனிமகிழ்ந்து (47)

தன்னேரிலாததலைவியைமுன்புகுத்த
வன்னேர்குழலுமவணடைந்து, பொன்னேர் (48)

வளவர்பெருமானாமோதவத்ததென்ன
வளவிலாமாதவமங்காற்ற, வுளமகிழ்வுற் (49)

றெம்மால்யன்முன்போலின்றுஞ்செருக்கடைந்தா
ரம்மாவென்றியாருமதிசயிப்ப, விம்மாநன் (50)

மேதினிநின்றுவெளிமுகடுமூடுருவச்
சோதியுருக்கொண்டெழுந்துதோன்றினோன்,நீதிலரு (51)

ளானேயென்றேத்துமவர்தெளியுமாறுதன்னைத்
தானேயருச்சித்ததம்பிரான், வானாட (52)

ராதியர்காமிகமுன்னாமாகமத்தின்வழி
யோதியருச்சிக்கவுவந்தருள்வோன், போதியனீர் (53)

காகம்படியக்கனகவுருநல்கிப்பி
னேகவுருத்திரமெய்யெய்தவைத்தோன், கோகநக (54)

மாண்டமலராதிகொடுமென்னாகமத்தின்வழி
யாண்டமதவேழமருச்சித்தோன், பூண்டதவத் (55)

தோதைகெழுசீருரோமசற்குவெற்பீன்ற
கோதையொடுகாட்சிகொடுத்தபிரான், மேதை (56)

யொருவீரசோழனுளிராலயமும்
வெருவாநகரமுஞ்செய்வித்துத், திருவார் தைத் (57)

திங்கட்டிருநாளுஞ்செய்வித்துப்போற்றிசெய
வங்கட்கருணையருளியகோ, னங்கண்மிரு (58)

கண்டுமகன்பணியக்கண்டொருபாற்பசுமை
கொண்டுமிளிர்காட்சிகொடுத்தகோன், றண்டாப் (59)

புரவுக்குறுமுனியெப்போதுறுமென்றன்னுன்
வரவுக்கெதிர்பார்க்கும்வள்ளல், பரவுற்ற (60)

பூசைவினைமுற்றுவந்துபுண்ணியச்சுகீர்த்திதனக்
காசில்வினையெச்சமளித்தபரன், காசிபன்றன் (61)

கண்ணனிளமைக்கோலங்காணத்தவம்புரிய
வண்ணலதுகாட்டுவித்தஐமுகத்தோன், வண்ணக் (62)

குமரன்முனிவரொடுங்கூடியரன்றிக்கி
லமரநதியையமைத்துத், தமரமிகப் (63)

பூசிக்கப்பெற்றோன்புகழிட்டரோமன்சு
கேசிக்கினியகிளர்மதலை, வீசி (64)

யனையமகன்கங்கைபுகுந்தாடுறுபோதந்த
நினையுநதியோராநெறிக்கொண், டினையவென்ன (65)

வென்னைப்புரப்பாள்கணீர்ம்புனல்வாவிக்குள்வரக்
கொன்னைக்குழமகனுங்கூடவந்து, முன்னையொரு (66)

வாவிபடிந்தையாற்றுவாவியிடைச்சொல்லரசர்
மேவியெழுந்தென்னவெளிவந்து, கூவிவரு (67)

மத்தனொடுகூடியடிபோற்றியேத்தெடுப்பச்
சித்தமகிழ்ந்தருளிச்செய்தபிரா, னுத்தமச்சீர் (68)

வாய்த்ததசரதற்கும்வண்பூவைப்பூவைநிறஞ்
சாய்த்தவுடற்கண்ணனுக்குந்தானுவந்து, பூத்த (69)

மதலைபல்நல்கிவழிபட்டாரென்று
மதலைபலநல்கியவள்ளல், சுதமில் (70)

புகழிராமன்கணையாற்பூந்தடமொன்றாக்கித்
திகழவழிபாடுசெய்ய, மகிழ்சிறந்தோன் (71)

மச்சகந்தியைப்புணரவந்தவருவருப்பை
மெச்சும்பராசரற்குவீட்டினோ, னச்சமிலா (72)

தாசானிலாட்புணர்ந்தவாசுங்கலேக்குறைவுந்
தேசார்மதிவணங்கத்தீர்த்தருளு, மீச (73)
னினைத்தொருதீர்த்தத்தினிமிமகன்கண்டப்பு
ணனைத்தவுடன்காயவைத்தநாதன், வினைத்திறனோ (74)
னைவருநீர்தோய்ந்தடிட்ணியமண்ணளித்த
தெய்வப்பெருமான்சிவபெருமான், குய்யம்வைத்து (75)
வேந்தன்வலற்செகுத்தவெம்பழிக்கும்பாகனைக்கொன்
றேந்துபழிக்கும்பழிச்சவீறுசெய்தோன், போந்துதழல் ()
காண்டவனத்தைக்கலந்தவுயிரோடுண்ண
வீண்டரின்முற்றும்பரவவீடழித்தோன், மாண்ட (77)
குறுமுனிகண்களிக்கக்கூற்றுவிமேவி
மறுவிலகோரவுருவாய்ந்தோ, னுறுசீர் (78)
நிருதிதடந்தோயுமியதியரைப்பேய்முற்
கருதியடையாவண்ணங்காப்போன், சுருதி (79)
நடையார்வருணனறுநீர்படியக்
கடையார்சோத்திப்படியக்கண்டோ, னடையுங் (80)
திருகலன்கானீர்மூழ்கிக்கேடிலாமுத்திப்
பெருமுழுநீர்மூழ்கவைத்தபெம்மான், வருமொருதன் (81)
தோழன்றடம்படியுந்தூயோரைமற்றவனுந்
தாழவுயர்த்துந்தனிமுதல்வன், வாழ்வடைவா (82)
னேகாமார்க்கண்டமுனியீசானநீர்மூழ்கச்
சாகாவரங்கொடுத்ததண்ணளியோன், வாகான (83)
கண்ணன்கூவத்துக்கருதிமழைக்கோண்மூழ்கக்
கண்ணன்களித்தருளுங்காபாலி; கண்ணுவணம் (84)
பண்ணியதீர்த்தமுதற்பத்துந்தோய்வார்பிறப்பை
மண்ணியருளுமகாலிங்கம், புண்ணியமே (85)
மேவவளர்கச்சபனுமெய்முனிவன்முன்வாம
தேவவுருக்கொண்டெதிர்ந்ததேவர்பிரா, னேவுறமுன் (86)
கோதமதீர்த்தந்தோய்குணத்தாலகவிகைக்கு
வாதனைப்பாடாணவுருமாற்றுவித்தோன், போதலர்கல் ()
யாணதீர்த்தங்கார்க்கோடன்படியமுன்பரிச்சித்
தேணறத்தீண்டிக்கொள்பழிக்கீறுசெய்தோ, னீணிலஞ்சே.

ரந்தநறுந் துறைபுக்காடுளனுக்குச்சி
வந்தகலியைக்கறுத்துமண்கொடுத்தோ, னந்தமதில் (89)

வெள்ளைமுழுகவொருவேதியனைக்கொன்றபழிக்
கள்ளக்கறுப்பகலக்கண்சிவந்தோன், றள்ளரிய (90)

சீர்த்திப்பகீர்தனத்தீர்த்தம்படியநலங்
கூர்த்தவான்சங்கைகுவலயத்தி, லார்த்துவரச் (91)

செய்தோரறுபதினுயிரருமுத்தியுல
கெய்தாவிருக்கவினிதளித்தோன், வையகத்துப் (92)

பொல்லாவொருவன்வந்தப்பூசத்துறைபடிய [நீர்]
வல்லார்மெய்க்கூற்றவனுக்கஞ்சவைத்தோன், சொல்லுமங்

வல்லானெனச்சேடன்வந்தாடமண்சுமக்கும்
வல்லானெனச்சொல்வலியளித்தோ, னல்லார் (94)

திகழத்துறைகந்ததீர்த்தமெனக்கந்தர்
புகழுற்குடக்கருணைபூத்தோ, னிகழ்வற்ற (95)

வத்துறையில்வேந்தனயிராவதமுனிவன்
வைத்தசாபங்கழுவவைத்தவருண், முத்த (96)

னொருகோட்டியானையுவந்தாடித்தன்பே
ரிருகோட்டதற்கிடவுள்ளேய்ந்தோ, னொருவீர (97)

சேனன்படியச்செறிபிரமக்கொலைதீர்த்
தீனமிலாவான்கைலையேற்றினோன், மானமிகு (98)

சித்திரகீர்த்திசெறிந்துபடிந்தர்ச்சிக்கப்
புத்திரனைநல்கும்புகழாளன், சுத்த (99)

மறையோன்கனகதடம்வந்துபடியக்
குறையார்குருடொழித்தகோமா, னிறையோனுய் (100)

விண்ணுலகையாளமரர்வேந்தன்முடிதகர்த்து
மண்ணுலகையாளும்வயவேந்தன், றண்ணளிசேர் (101)

மன்னன்மதுரைவயங்குவரகுண
தென்னன்பெருங்கானஞ்சென்றொருநாண், முன்னுகடு ()

மாவேட்டஞ்செய்துவயவாம்பரிமேன்மீள்பொழுதோர்
தீவேட்டவேதியனச்செல்வழியின், மேவி (103)

மயங்கிக்கிடந்துகனவட்டத்தடியா
லுயங்கிச்சழியவுணரா, னயங்கெழுசீர் (104)

பெற்றதன்னூர்மேவப்பிரமக்கொலைதொடர
வுற்றதெவையாலுமொழியாம, னற்றவர்சூ (105)

ழாலவாயண்ணலடிபோற்றவக்கடவு
ளேலவிடைமருதூர்க்கேகென்னச், சாலமகிழ் (106)

பூத்தனையான்வந்துபுகுபோதேயப்பழியைத்
தீர்த்தருளிச்செய்திடவத்தென்னவனு, மாத்தல்மா (107)

மித்தலத்தைநீங்கேனெனவங்குறைந்திரோ
ளத்தகொடுமுடியாவரணம், வித்தகமாச் (108)

செய்துசூழென்றுதிருவாய்மலர்ந்தப்டி
செய்துசூழ்ந்துங்கரவுதேரொருவன், செய்யநுதல் (109)

வெண்ணீறுகண்டுவிசித்தகடுங்கட்டவிழ்த்து
நண்ணீறிலாதபொருணன்களித்து, மெண்ணிநரி (110)

யுள்ளனவெல்லாமுடையானைக்கூவியவென்
றெள்ளரியவாடையினிதளித்தும், விள்ளாத் (111)

தவனையரமுழக்கந்தான்செய்ததென்று
திவண்மணிபொன்வாரிச்சிதறி, யுவகையுற்று (112)

மெள்ளுண்டவன்வாயிசைத்தமொழிகேட்டனையான்
றள்ளுண்டவெச்சிறனைநுகர்ந்துங், கொள்ளா (113)

விழிகுலத்தோன்சென்னியவ்வூரொல்லைகிடக்கக்கண்
டிழிகணீரோடுகரத்தேந்திக், கழிவுற் (114)

றடியேன்றலையுமிவ்வாறாகிவிவ்வூரொல்லைக்
குடியாமோவென்றிரக்கங்கொண்டும், படர்தளிமுற் (115)

புன்குலநாய்மலந்தன்பொற்பூங்கையாலெடுத்து
நன்குறவேம்பிற்குவிதானஞ்சமைத்து, மன்புமுதிர் (116)

பொன்னுநிகராப்புணர்முலைத்தேவிதனை
மன்னுமியற்பகைக்குமாறாக, முன்னு (117)

முயர்மருதவாணாவுவந்தடியேனுய்ந்
தயர்வறநீகொள்கென்றளித்தும், பெயர்வரிதா (118)

வின்னும்பலபணிசெய்தின்புறுமக்கோமாற்கு
மன்னுபுகழ்முத்திவழங்கினோ, னன்னிலைமைத் (119)

தொல்லையுவணாச்சுவன்வயிற்றுமாறாப்புண்
வல்லைவலஞ்சூழமாற்றினோன், வெல்லுமவன் (120)

மைந்தன்புறங்கொடுத்தமாற்றானைக்கொன்றபழி
முந்தவலஞ்சூழ்முன்முடிக்கினோ, னந்துவசு (121)

மான்வந்துசூழ்போதுமற்றவன்றனுடலனைத்
தான்வந்துசூழத்தலையளித்தோ, னீலந்தீ (122)

ரஞ்சத்துவசனடைந்துசூழ்முன்பவற்சூழ்
வஞ்சப்பிரமகத்திமாய்த்தபிரான், விஞ்சுபுகழ்ப் (123)

பூசத்துறைபடிந்தபுண்ணியர்கால்கைப்புனறோய்ந்
தாசற்றிரண்டுயிர்வானண்ணவைத்தோன், மாசற்ற (124)

நாரதமாமுனிவனண்ணிவிழாச்சேவிக்க
வாரம்படுகருணைவைத்தபிரான், வார்மீ (125)

னாணங்கலுயிர்பெற்றுருத்திரர்களாகி
யிணங்குலகத்தெய்தவருளேந்த, லணங்கன்மீன் (126)

கொண்டபொதியிட்டிலைகள்கொண்டவொருவனுக்குத்
தண்டவில்பொன்னாகச்சமைத்தபிரா, னண்டர்தொழப் ()

பொன்னுருவத்துட்டான் பொலியுமுருவொன்றியைத்துத்
தன்னுருவிலாவுருவந்தான்றெரித்தோன், பன்னுபொரு ()

ளோர்வளவற்கிந்தனையானென்பொருள்வீசிப்பணிக
ளார்தரச்செய்யவருள்வைத்தோ, னோரு (129)

மணங்கனுக்குமின்னாயவதரிக்கச்செய்தோர்
சுணங்கனுக்குமுத்திதந்தனுயோ, னிணங்குபொடி (130)

மெய்ப்பூசவர்கேட்பமேவுதிரியம்பகன்றான்
றைப்பூசமாடத்தகுமென்றோ, னொப்பேது (131)

மில்லாவலஞ்சுழியேயேரம்பன்வைப்பாக
மல்லேரகமுருகன்வைப்பாக, நல்லார்சேர் (132)

தண்மாடவாப்பாடிதண்டீசன்வைப்பாக
வண்மாந்துறையிரவிவைப்பாக வெண்மாறா (133)

நன்காமர்தில்லைநடராசன்வைப்பாக
மன்காழியேவடுகன்வைப்பாக, முன்கானூர் (134)

தென்னாவடுதுறையூர்சேவமர்வைப்பாவாரூர்
மன்னுசோமாக்கந்தர்வைப்பாக, வுன்னிற் (135)

றடைதவிராலங்குடியாசாரியன்வைப்பாக
விடைமருதில்வீற்றிருக்குமீச, னடைதருசீ (136)

ரேற்றவுருத்திரர்களேகாதசரும் வந்து
போற்றவருள்செய்தபுகழ்ப்பெருமான், மாற்ற (137)

மிணங்குமணிபொன்னுதியிட்டமரரொன்றும்
வணங்குமருதவனவாண, னணங்கயர்புற் (138)

றேறுடையான்காதில்வளைத்தோடுடையானீடமர்கல்
லாலுடையான்யாவரையுமாளுடையா, னூலுடையார் ()

நாடுவோன்பற்றுதநாயேனிதயத்துங்
கூடுவோன்பொன்செய்குளிர்மன்றத், தாடுவோ (140)

ஞோராழித்தேரோனுதீசித்திசையென்னுஞ்
சீராழியங்கைமகட்சேருவா, னோராகச் (141)

சென்மதியுண்முன்மதியிற்றேய்மதியில்பக்கத்து
நன்மதிகொடன்வதனத்தொகைகொ, டுன்னுதிதிப் (142)

புட்கொடிகைக்கொண்டு பொறிக்கொடிமார்பிற்கொண்ம
கட்கொடியேற்றிக்களிசிறப்ப, விட்குலவு [ணைக் (143)

குன்றுபுரைதோளாருங்கோற்றொடியாரும்புவனத்
தொன்றுபலருமுடனெருங்க, வன்றுமுதற் (144)

காலையினுமாலையினுங்காமர்பலதூரியமும்
வேலையினுமார்ப்பவியன்மறுகின், மாலைபெற (145)

வெற்புநிகரவிளங்குபலவூர்தியினும்
பொற்புமலிபவனிபோந்தருளி, யற்புமுதி (146)

ரின்பதாமென்னவெவருந்தொழச்சேரு
மொன்பதாநாளென்னுமொண்டிருநாண், மின்பயில்பூண்

வாய்ந்தபெருநலமாமுலையோடியற்று
மேய்ந்ததுயினீத்தினிதெழா, வாய்ந்தசெழும் (148)

பைம்பொற்றகட்டிற்பலமணியுங்கால்யாத்த
வம்பொற்றிருமண்டபமணுகி, நம்புற்ற (144)

வீறுதருமாகமஞ்சொன்மிக்கவிதிப்படியே
கூறுமபிடேகங்கொண்டருளி, நாறுகுழற் (150)

பெய்வளைத்தோளெங்கள் பெருநலமாமுலைதன்
மைவளையுநீலமலர்நோக்கான், மெய்வளைத்த (151)

பேரழகுநோக்குதலாற்பேதையவணயனக்
காரழகுமேனிகலந்ததென, வீரமலி (152)

காத்திரகும்பக்கருமலையிற்கொள்போர்வை
போர்த்தியிருந்தபொலிவென்னச், சீர்த்திமிகு (153)

பன்முகத்துமுள்ளபலவண்ணமுமறையத் [பிறர்
தென்முகத்துவண்ணமெங்குஞ்சேர்ந்ததெனத், துன்னு

தப்பார்தருக்கொழிதல்சான்றிதெனமால்கொடுத்த
குப்பாயமெய்ப்புனைந்துகொண்டதென,வொப்பேது (155)

மில்லாத்திருமேனியேந்தழகைச்சாந்தமுலைப்
பல்லாருங்கண்டுபேசப்பெய்திப், புல்லாளப் (156)

பெட்டாவிமாழ்காமற்பெய்வளைக்கையம்மைகரும்
பட்டான்மறைத்தபடியென்னச், கட்டார்கொ (157)

ளோதிமுடியாள்சமழ்ப்பவோங்கற்புதல்விமற்றோர்
பாதியுருவுக்கவர்ந்தபான்மையெனத், தீதின்மணம் (158)

பொங்குநீலோற்பலப்பூமலர்த்தாளன்றி
யெங்குநெருக்குற்றேறியவென்னத், தங்கு (159)

மணமாரும்பஞ்சவடியொளிபாய்ந்தென்னத்
தணவாத்திருச்சாந்துசாத்தி, நிணமலிவாய் (160)

வேங்கைகொடுத்தகலைவீக்குமிடத்தொளிரும்
வேங்கைகொடுத்தகலைவீக்கியே, யோங்குப்ய (161)

ஞய்ந்தவொருபெண்ணுமற்றோராணுமனமகிழச்
சாய்ந்துமிர்ந்ததனியிடத்து, வாய்ந்தபுனற் (162)

பெய்வளைமாதைப்பெருநலமாமுலைதன்
மைவிழிகாணுமன்மறைத்ததெனக், கைவல்லா (163)

ராற்றுமணிமகுடமம்பவளவோங்கன்மிசைத்
தோற்றுகதிரொன்றுசொலக்கவித்துப், போற்றுபுக (164)

ழாற்றன்மிகுகண்ணப்பரன்பிற்சொலுமுகம
னேற்றுமகிழ்பூத்தவியலிடத்துச், சாற்றுபுனன் (165)

மங்கையுரைக்குமொழிவந்துபுகாதுமையாள்
செங்கைபுதவஞ்செறித்ததெனப், பங்கமிலா (166)

மாமணிசெய்தோடும்வயிரஞ்செயுமம்பொற்
றூமகரகுண்டலமுந்தொட்டணியா, வேமவரை (167)

யொன்றுபடவிறுகியோங்கன்மகண்மார்பில்வளர்
குன்றுபடமெல்கிக்குழையிடத்து, நன்றுதரு (168)

போருசுடர்ப்பன்மணியும்பொங்கியெழக்கால்யாத்த
வாகுவலயம்வயக்கியே, மாகவின்செய் (169)

கஞ்சக்கண்மாயனயன்கற்பகக்கோனுதியர்கூற்
றஞ்சச்சிறைவைத்தவவ்விடத்தே, விஞ்சுபுகழ் (170)

மின்னுமுலகங்களெல்லாம்விற்றூலுமீடாகா
மன்னுமணிக்கட்டுவடமணிந்து, பன்னுமுமை (171)

வட்டமுலைக்குமணிவாராமிடத்தண்ட
மட்டினிலாவிற்றரளமாலையிட்டு, முட்டரிய (172)

தாவின்மணிவீரசங்கிலிமதாணிபல
மேவியவாயிடைமேன்மேற்புனைந்து, தாவா (173)

மடங்கீண்டதொண்டருத்தமாங்கந்தாங்கக்கல்
லிடங்கீண்டெழுந்தவிடத்தே, மடங்காக் (174)

கருவிதனக்குக்கருதுபிறவேண்டா
விருமைமணிக்கடகமிட்டுக், கருது (175)

மலரோன்முடிதுணித்தவைவாட்குறையா
யிலகுமிடத்தாழிபலவிட்டு, நலமருவு (176)

பொன்னுக்குப்பின்னிருந்துபொங்குவெள்ளிதங்கிடத்து
மன்னுதரபந்தம்வயக்கியே, துன்னியொரு (177)

பன்றிதொடரமற்றோர்பன்றிதனைத்தொடர்ந்து
சென்றவிடத்துச்சிலம்பணிந்து, நன்றவற்றுட் (178)

கொண்டசினமாதிகுறையாதேதென்றிசைக்கோன்
கண்டவிடத்துக்கழல்கட்டித் தண்டாத (179)

மாதங்கவுத்தரியமன்னுமிடத்தொளிசெய்
மாதங்கவுத்தரியமன்னுவித்துத், தாதுவிரை (180)

தாவாதகொன்றையந்தார்சர்ப்பப்பிராந்தியிட
மோவாதாண்மேவவுவந்தணிந்து, பூவார்கைக் (181)

கொண்டகருப்புச்சிலையான்கோலத்திருமேனி
யுண்டகடுங்கூற்றுறையிடத்தே, தண்டலில்பா (182)

லேறுகடலலைமாலேய்ந்நீற்றுத்துளனமே
ஞறுதிரிபுண்டரநானத்திலகம், வீறுகொள (183)

விட்டுமதிப்பாதியெடுத்துமுடிமேற்கவிய
நட்டினிதுவைத்தநயமென்ன, வெட்டுணையு (184)

மாசுசாராதவயிரமுழுக்கச்செறித்த
தேசுத்திருவாசிகைசேர்த்துப் பேசுபுக (185)

ழிட்டநமக்கோரிளவலின்றுவருமென்றுமலர்
மட்டுறுதாராரூரன்மன்னுவகை, யுட்டுளைய (186)

நின்வலப்பாகத்தொருத்திநீங்காதிருப்பதென்னென்
றென்மலர்வாமத்தாளிசைத்தூட நன்மைதிக (187)

ழும்மதியையிவ்வரவுமவ்வரவையிம்மதியுஞ்
செம்மையுறவுகொண்டுசேர்படைப்ப, மும்மைப் (188)

புவனத்துந்தான்றோய்பொலிவுணர்த்தலேய்ப்பப்
பவளக்காற்கண்ணாடிபார்த்துத், திவள்பருப்புப் (189)

பொங்கல்பான்மூரல்புளியோதனங்குளஞ்சேர்
துங்கமடைநெய்மிதக்குஞ்சொன்றியன்னை, தங்கயினி (190)

பாகுகருனைபகரும்வறையறுவை
யாகுமிலட்டுகமெல்லாவியப்பம், போகுசுவை (191)

நோலையடைநன்னுவனைமுதற்பலவுஞ்
சோலையுதவுசுவைக்கனியுங், காலை (192)

யிளநீர்குளநீரியன்மோரளாய
வளநீர்கனிபிழிந்தமாநீ, ரளவா (193)

வெவ்வையுஞ்சுவைதேர்ந்தியலவாய்பூசிக்
குவைகொள்விளைப்பாகடையுங்கொண்டு நவையரிய ()

மேதகுதூபந்தீபமிக்கவிவைமுதற்செய்
போதுபசாரங்களுவந்தருளிக், கோதறுசீர் (195)

வாய்ந்தவொருதானும்வயங்குதனதருளிற்
றோய்ந்தவடியாருஞ்சொலவந்த, வாய்ந்த (196)

வெழுதாமறையுமெழுதுமறையும்
வழுவாதுகேட்டுமகிழ்ந்து, தொழுவார் (197)

நயங்குலவின்பநறும்பலம்பெற்றுய்ய
வயங்குமொருகோட்டுமாவுஞ், சயங்கொள்சத (198)

கோடியரசின்குலந்தழையவெம்பகையைத்
தேடியவோர்வேல்கொள்செழுங்குருந்தும், பாடியலா ()

வோட்டைமனத்தக்கனும்பரணிச்சோதிமகங்
கேட்டையுறச்சிவந்தசேடிலியு, நீட்டுமொரு (200)

கைத்தலைநால்வேதங்கமழ்வாய்த்தலையொன்று
வைத்தலைநெய்த்தோரேற்றவானவனு, நித்தமுந்தன் (201)

னும்மனைசெந்தாமரையேயாகவுறைவாளைத்
தாய்மனையென்றழைக்கத்தக்கோனுந், தூயவையை (202)

நீருநெருப்புநிரம்புதமிழ்ப்பெருமை
யோரும்படியருள்கொளொண்மழவுந், தீராத்துன் (203)

பாயகடலமணராழவரையொடலை
மேயகடன்மிதந்தவித்தகனுங், மாயவன்கண் (204)

காணுக்கமலநடுக்கங்குவிஞரூர்த்தெருவின்
மாணுகப்பூத்தழல்வைத்தானுங், கோணுது (205)

மூகைவாய்பேசமுழுப்பேச்சுவாய்மூகை
யாகவியற்றியவாண்டகையும், பாகமிலாத் (206)

தாதையிருதாடடிந்துதாயையொருபாகங்கொ
டாதையிருதாளடைந்தசான்றவனு, மோதைசெழு (207)

கைச்சிலம்பின்றோலுடைத்தன்காற்சிலம்பினோசைசெவி
வைச்சிலம்பினுண்டுய்ந்தவானவனும், பச்சுமைகை (208)

யாய்நீர்கரந்தவரியமுடிமேல்வழிய
வாய்நீர்பொழியன்புமாமுகிலும், பாய்மை (209)

தகவரிந்தூட்டாதுதலையிழந்தானுண
மகவரிந்தூட்டியசீமானு, நகமறைக (210)

ளீன்றதன்வாயென்றுமிசைத்தறியாவம்மையெனு
மான்றசொல்லிசைக்கவமைந்தாளுஞ், சான்றதிரு (211)

மங்கலப்பொன்கொண்டுமனைவாய்மொழிசொற்கொள்ளாது
குங்கிலியங்கொண்டுவெந்தகொள்கையனும், வெங்கொடி

கோசமறைத்தவாள்கொண்டுதகாதாற்றவுந்த [யோன்
னேசமறைத்தறியாநீதியனும், வாசமுறத் (213)

தோய்ந்தபுகழாரூரன்றொண்டத்தொகையுணிலைத்
தாய்ந்தபுகழ்மற்றையடியாரும், வாய்ந்த (214)

வலர்துழாய்நாறுமகன்றளியைக்கொன்றை
மலர்துழாய்நாறவைத்தமானு, நிலவு (215)

---

212. சொல்=நெல்.

முலகுண்டுமிழ்ந்தவொருவனைப்பாலுண்போ
துலகறியவுண்டுமிழ்ந்தோனு, மிலகுநடங் (261)

கண்டேபசிதணிக்குங்காமர்விரதமொன்று
கொண்டேவிளங்குகுணத்தவருந், தண்டேறல் (217)

பெய்தவர்பெய்யலர்பேசலரேயாகச்
செய்தவனொன்னுமற்றைச்செய்தவருங் கையிற் (218)

குடவளைகொண்டுங்குடவளைக்காய்ப்பாடி
வடவளைகட்டுண்டமாலு மிடவளையப் (219)

பூமேலெஞ்ஞான்றும்பொலிந்தும்புத்தேளாய்ச்செந்
நாமேல்வெண்மாதுவைத்தநான்முகனு மாமே (220)

வொருசுவர்க்கங்கைக்கொண்டுவேந்தயிராணி
பிருசுவர்க்கம்வைகுமிறையும் பொருவரிய (221)

வெற்பகநாணப்பொலிந்துவீங்குதோண்மேற்புனைந்த
கற்பகமாலைக்கடவுளரும் பொற்பகலாத் (222)

தேந்தாமரைமலர்த்துஞ்செங்கதிரும்பூவினுக்கு
வேந்தாமதுகுவிக்கும்வெண்கதிருங் காந்தாப் (223)

பொலிபடைகொண்டாசைபுரப்போருஞ்சீர்த்தி
யொலிபடைத்தபூதகணதரோரு. மலியுமிசை (224)

பத்தர்பதியாழ்கொண்டுபாடுந்தொழில்வலருஞ்
சித்தருரகர்முதற்செம்மையரு, முத்தமமீ (225)

தெண்போதெனவொருவனெள்ளெச்சிலுண்டவிமற்
றுண்போர்பலருளுயர்ந்தானும், பண்போ (226)

ரணிக்கோவைதிட்டியகமகிழ்தற்கோர்மும்
மணிக்கோவைசூட்டியகோமானும், பிணிக்கோதி (227)

லாதிசைவராதியணியாலயத்தொண்டிற்
கேதிலராகாதியற்றுமெல்லோரு, நீதிநெறித் (228)

தக்கபெருஞ்சீர்ச்சுத்தசைவசித்தாந்தத்திருவின்
மிக்கதிருக்கூட்டமேன்மையரு, மொக்கவரப் (229)

பண்பார்கைலாயபரம்பரைமெய்கண்டா
னண்பார்சந்தானநனிதழைக்க, விண்பார் (230)

புகழவருங்குரவர்போறுஞானர்
திகழவருமானந்தச்செல்வ, னிகழ்வி (231)

றறவுபூண்டோர் பலர்க்குஞ்சூளாமணிமிக்
குறவுபூண்டெவ்வுயிருமுண்மை, பெறவுவக்கு (232)

ஞானவிநோதனுயர்நாவலர்தம்போரேறு
சானமுடையார்தனித்துணைவன், மானத் (233)

திருவாவடுதுறைவாழ்செல்வன்கருணை
மருவாவருநமச்சிவாயன், பொருவா (234)

வரமணியென்றெல்லோரும்வாழ்த்தப்பொலிசுப்
பிரமணியதேசிகனெம்பெம்மான், பரவுமுண்மை (235)

தாங்குபெருஞ்சித்தாந்தசைவக்குழாங்களென
வோங்குதிருக்கூட்டத்துடன்மேவ, வீங்குசெம்பொற் ()

தேரும்பரியுஞ்சிவிகையும்யானையுமற்
றாரும்பிறவுமுவந்தூர்தருபல், லோருள்ளு (237)

முன்னூர்வோர்பக்கத்துமொய்த்தூர்வோரோர்தனக்குப்
பின்னூர்வோரம்முறையேபெற்றூரப், பொன்னூரு (238)

மின்பணியும்வேத்திரமென்மலர்க்கைகொண்டசைத்துத்
தன்பணியினந்திதலைநிற்பக், கொன்பரவு (239)

வாரியுடுத்தபெருமண்ணொருதாட்குள்ளடக்கு
மூரிவிடைக்கொடிமுன்போத, வேரிவரு (240)

மால்வட்டஞ்சாமரைசாந்தாற்றியொலியன்முதன்
ஞாலவட்டஞ்சொல்பலவுநண்ணிமொய்ப்பக், கோல (241)

முழுவெண்மதியுமுடிமேற்கொண்டென்ன
வெழுவெண்குடைமேலிலகப், பழுதில் (242)

பதலைமுழவம்படகந்திமிலை
முதலமுகிலின்முழங்க, நுதலிதொளிர் (243)

கண்ணுடையான்வந்தான்கருதுமொருபாகம்
பெண்ணுடையான்வந்தான்பிரான்வந்தா, னெண்ணினருக்

காய்தந்தவன்பருளியாட்கொள்பவன்வந்தான்
றாய்தந்தையில்லாதவன்வந்தான், பாய்தந்த (245)

நல்லாரணியேகநாயகன்வந்தான்புல்லமை
வல்லாரணிமருதவாணன்வந்தான், புல்லார் (246)

நயந்தபுரம்வெவநகைத்தபிரான்வந்தான்
வயந்தழைவெங்கூற்றுதைத்தான்வந்தா, னயர்ந்தயன்மால்.

சர்வாமனஞ்சுண்டதம்பிரான்வந்தானெம்
மூவாமுழுமுதன்மூர்த்திவந்தான், ஞுவாத (248)

பொன்னம்பலத்தாடும்புண்ணியன்வந்தானென்று
சின்னம்பலவுமெதிர்சேவிப்ப, வன்னமணி (249)

யாத்தவொளிமண்டபநின் றுதேவியொடு
மேத்திமறைவாழ்த்தவினிதெழுந்து, தாத்திரிநின் (250)

றம்பொன்முடியண்டமளாவவெழுகோபுரநற்
பைம்பொன்மணிவாய்தல்பலகடந்து, செம்பொன்மலர் ()

தூற்றியெல்லோருந்தொழநடைக்காவணத்தி
னேற்றவழியேயெழுந்தருளித், தோற்றத் (252)

தலங்குதிருவீதியணுகியம்பொன்வெற்பி
னிலங்குதிருத்தேர்மேலேறி, நலங்கொளரி (253)

யாதனத்துமேவமுடியாரும்புனற்றுறைகண்
டாதரத்துமேவவந்தவன்னமெனச், சீதநிழல் (254)

வாழ்மருதவாழ்க்கைமதித்துறவுகொள்ளவந்த
கேழ்கிளர்செந்தார்ப்பசுங்கிள்ளையெனத், தாழ்சடைமேன்.

மின்னுமுகிலின்விளக்கமுணர்ந்துவந்த
மன்னுகலாபமயிலென்னப், பொன்னிறங்கைத் (256)

தாய்க்குமுனமளித்ததண்ணருள்கண்டுவந்த
கூய்க்குலவுதேமாங்குயிலென்னச், சேய்க்குமுன (257)

மேவுமொருபெண்கொண்டமெய்யுறவுகண்டுவந்த
வாவுமிளமடமானென்னத், தாவாத (258)

வொண்டருவென்றுதனையுள்கிப்படரவாக்
கொண்டருகுவந்தகொடியென்ன, மண்டு (259)

சடையையினமென்றுதவக்கருத்திற்கொண்டா
யிடையடைபுவந்தமினலென்ன, வுடையதனைக் (260)

கோணில்பிரணவகுஞ்சரமென்பதுளம்
பேணியடைந்தபிடியென்ன, வாணிலவு (261)

விண்ணுலகமேயபலமின்னொரும்வாரிதிசூழ்
மண்ணுலகமேயமடவாரு நண்ணுபெரும் (262)

பாதலத்துமேயபலமாதருமாட
மீதலத்துஞ்செய்குன்றமேனிலத்தும் பூதலத்துஞ் (263)

சோதிமணிச்சாளரத்துஞ்சூழ்பசும்பொன்மன்றிடத்தும்
வீதியிடத்துஞ்சதுக்கமேவிடத்து, மோதிமநேர் (264)

மாடமலிசோபானவைப்போடரமியத்தி
மாடகஞ்செய்வேதியதனிடத்தும், பாடமையு (265)

மின்னென்றுசொல்சடையீர்வின்மாரனையெரித்த
தென்னென்றுகேட்கவெழுந்துநிற்ப, தென்னக் (266)

குருமுடிக்காரோடுறவுகொள்ளவிழைந்தென்னப்
பெருமுடிக்காரோதிபிறங்கத், திருமுடியில் (268)

வாழும்பிறைவடிவும்வண்ணமுமொத்தேமென்று
வீழும்பொடிநுதன்மேன்மேல்விளங்கப், போழுங் (268)

கருவிழிச்சேல்கங்கைகலப்பமுயன்றென்னப்
பொருவிலிருபாலும்புரள, வொருவின்முடி (269)

யவ்வாய்மதிநட்பமைந்தவரக்காம்பலெனச்
செவ்வாய்மலர்ந்துசுவைத்தேனூற, வொவ்வா (270)

வலக்கணுறவுற்றுவயங்குகமலம்போ
னலக்கமுகம்பொலிவுநண்ண, நிலக்கண் (271)

டனைவேய்கொண்டாங்குறவுதாங்கொளவுற்றென்னப்
புனைவேய்வனைத்தோள்பொலிய, வனையும் (272)

வரையைக்குழைத்தவரைகுழைக்குமாபோல்
விரையைக்குவிமுலைகள்விம்மப், புரையறுதன் (273)

கண்ணெதிராகாக்கணைமதவேளன்றென்னு
மெண்ணெதிராகாவிடைதுவள, வண்ணவரைத் (274)

தன்பணியைவெல்லத்தருக்கியெதிருற்றெனச்செம்
பொன்பணியல்குல்புடைவீங்க, நன்புவியோ (275)

ரெண்ணியறோர்யாத்தவெழிலரம்பைமுற்றும்வெல்க்
கண்ணியடைந்தாங்குக்கவான்பொலியப், புண்ணியத்தன்

பாடியறேர்மேவப்பழகுதல்போற்றன்பழைய
நீடியறேர்மேவுபதநேர்சிறப்பக், கூடி (277)

யெழுகடலூநாணவெழுந்தபெருவெள்ள
முழுதுநெடியசடைமோலி, யொழுகழநும் (278)

வையமிகழ்தக்கன்மகக்கூற்றவதரித்த
செய்யவிழிநெற்றித்திருவழகு, முய்யப் (279)

பகலிரவுசெய்யம்பகத்தழகும்வேத
மகலரியசெவ்வாயழகும், பகரடியார் (280)
மெய்த்தசுவைச்சொல்லமுதேவேட்டசெவியழகு
மொய்த்தகருணைமுகத்தழகு, மொத்துலகங் (281)
காத்தமணிகண்டக்கறுப்பழகுமேருவலி
தேய்த்ததடந்தோட்சிவப்பழகும், வாய்த்தசிவ (282)
ஞானங்குடிகொணகுபூண்முலையுழக்குந்
தானமெனுமார்பத்தனியழகு, மானகுகீ (283)
ரோடைபெனுந்தன்முகத்திஜெண்கணெனும்பூவமைக்குங்
கூடையெனுஞ்செந்தாட்குலவழகும், வாடையுத (284)
வெண்ணுற்றவில்லோவெனும்வாசிகையழகு
நண்ணுற்றபுன்மூரனல்லழகுங், கண்ணுற்ருர் (285)
மாலானர்கண்ணிமைப்புமாறினரோவியமே
போலானர்நெஞ்சம்புழுங்குவார், சேலான (286)
கண்முத்தஞ்சூடிக்கதிர்த்தமுலைமேற்பழைய
வெண்முத்தம்போக்கிவெதும்புவா, ரொண்மைச் (287)
சுரிகுழலுந்திடையைச்சூழவுடுத்த
விரிகலைபோக்கிமெலிவார், பிரிவரிய (288)
நன்ஞமெடுகெதிருநாணுமணிகோத்தபல
வென்னுணும்போக்கியுளம்விம்முவார், பொன்ஞன (289)
கன்றுகழன்றகறல்காணரிளந்தென்றற்
கன்றுகழலாதடைதல்கண்டயர்வார், நன்றுநன்று (290)
பொன்செய்தசெஞ்சடையார்போற்றியாநோக்கியதற்
கென்செய்தாராலென்றிரங்குவார், மின்செயொரு (291)
பங்காட்டிசெய்தவமேபாடுற்றதுவீணே
யங்காட்டிநாம்பயில்வதம்மவென்பார், செங்காட்டுப் (292)
பிள்ளைப்பழிகொண்டார்பெண்பழிக்குநாணுவரோ
கொள்ளைப்பழிகொள்கொடியரென்பார், வள்ளைப் (293)
பயம்பணையார்கூடற்பழியஞ்சியாரொன்
றியம்புவதுமுகமனெனன்பார், நயம்படரப் (294)
பொங்கரவப்பூணுவந்தீர்புன்கணுதவுமக்குச்
சங்கரரொன்னும்பேர்தகாதென்பார், துங்கமிகு (295)

*வேய்வனமேவல்விருப்பீரெம்பொற்றொடித்தோள்
வேய்வனமேவல்விரும்பீரோ, காயரவின் (296)

வாயமுதகொண்டுமகிழ்வீரெஞ்செம்பவள
வாயமுதுகொண்டுமகிழீரோ, மேயமலர்க் (297)

கொங்கைச்சிலம்புகுழைத்தீரெம்மார்பிடங்கொள்
கொங்கைச்சிலம்புகுழையீரோ, பங்கமிலிப் (298)

பொற்றேர்விரும்பிப்புணர்ந்தீரெம்மல்குலெனும்
பொற்றேர்விரும்பிப்புணரீரோ, கற்றலஞ்சேர் (299)

§ வாழையடவிமருவினீரெங்குறங்காம்
வாழையடவிமருவீரோ, தாழ்விழியாச் (300)

சீதமதியைமுகஞ்சேர்த்தீரெம்பொன்வதனச்
சீதமதியைமுகஞ்சேரீரோ, நாதவரு (301)

டாவென்றவோ ‡ ரன்பர்தம்பாற்சென்றுன்மனையைத்
தாவென்றதூர்த்தருநீர்தாமலவோ, மாவென்றிப் (302)

பூதஞ்செயும்படையீர்பொன்னனையாள்பாலிரத
வாதஞ்செய்தன்புற்றார்மற்றெவரோ, சீதமலர் (303)

மட்டார்புன்னமதுரைவாழ்வணிகமின்னார்கை
தொட்டாரும்வேறுமொருசுந்தரரோ, கட்டார்கொ (304)

ளோதியெமைப்பாராநீரோரரசன்முன்கொடுத்த
மாதினையெவ்வேதுவினுள்வைத்திருப்பீர், மோது (305)

புரத்தையெரித்ததுமெய்போர் புரிதலால்வேள்
புரத்தையெரித்ததுநீர்பொய்யே, சிரத்தையின்மாற் (306)

காழிகொடுத்தநுமையாதரித்தநாங்கள்கைப்பல்
லாழியிழப்பதழகாமோ, வாழ்தேனூர்க் (307)

கன்றுக்கிரங்குங்கருணையீர்தீருமெங்கைக்
கன்றுக்கிரங்காவன்கண்மையெவ னன்றோர் (308)

நகரிலமண்சுருக்கிநங்கூறைதீர்த்திந்
நகரிலமண்பெருக்கனன்றோ புகரில் (309)

---

* வேய்வனம்=திருநெல்வேலி.

§ வாழையடவி=திருப்பைஞ்ஞீலி.

‡ அன்பர்=இயற்பகைநாயனார்.

கருங்குயினும்பாலடக்கக்கற்றீர்வருத்துங்
கருங்குயிலெம்பாலடக்கக்கல்லீர், நெருங்குழலை (310)
யுள்ளிடத்தும்வைத்தீரொருத்திகவர்ந்துகொண்டு
தள்ளிடத்துமெம்மைவைத்தருஞ்சகியீர் வெள்ள (311)
மடக்குந்திறலீரொம்மம்பகம்பெய்வெள்ள
மடக்குந்திறல்சற்றுமாளீர், கடுப்பின் (312)
மதிமயங்காவண்ணமுடிவைத்தீர்பரவெம்
மதிமயங்காவண்ணம்வைக்கமாட்டீர், புதியகரு (313)
மஞ்சமையுமெங்கண்மணிக்கூந்தற்கட்டவிழ்ப்பீர்
பஞ்சவடிக்காங்கொலெனப்பார்த்தீரோ, வஞ்சம் (314)
பயில்கொக்கிறகுபடர்சடைவைத்தீர்வெங்
குயில்பற்றிறகெவனீர்கொள்ளீர், வெயிலின் (315)
மணியுடைநும்பூணுணவுமாற்றும்விரத
நணியனகொறென்றனடுக்கும, பிணிதவிர்மெய் (316)
யந்திவானென்றேயமைத்தோமமைப்பதற்கு
முந்திக்குவிந்தமுககமல, நந்திப் (317)
பரவுசடைமுகிலைப்பார்த்தவுடன்சொல்லாய்
விரவுகுயிலொடுங்கிவிட்ட; வுரவிற் (318)
றிகம்பரராநும்மைத்தெரிந்தடைந்தயாமுந்
திகம்பரரோயாகிச்சிறந்தோஞ், சகம்பரவு (319)
மத்திக்கருளியறங்கொண்டீரெங்கண்முலை
யத்திக்கருளியறங்கொள்ளீர், பத்தியருக் (320)
கேற்றுவருவீரிடர்க்கடலுண்மூழ்குமெமக்
கேற்றுவராமையியம்புவீர், போற்றியனும் (321)
மேனிதழலென்றுரைப்பார்மெய்யேயருகடைந்தே
மேனிதழலாயவிதத்தென்பார், மேனு (322)
ளுணங்கன்மீன்றுள்ளவுவந்தீர்நீர்கண்மீ
னுணங்கன்மீனாகவுவப்பீ, ரிணங்கு (323)
மிடைமருதானந்தத்தேனென்பாரருளா
வடைவினிம்பநெய்யென்றறைவோ, முடையவரோ (324)
கோதைதரினுவப்புக்கூடுமெருக்கின்மிகு
வாதையுறுமென்னுமடவாருளொரு, பேதை (325)

குழாங்கள் முற்றியது. கண்ணி ? ௩௨௫.

(இத்தலத்தின் மகத்துவம்.)

1-வது விநாயகர், 2-வது சுப்பிரமணியர், 3-வது தண்டீசுரர் 4-வது சூரியன், 5-வது நடராசர், 6-வது வைரவர் எ-வது நந்திதேவர், 8-வது சோமாஸ்கந்தர், 9-வது தக்ஷணாமூர்த்தம், இத்தெய்வங்களுக்கு உரித்தாயுள்ள தலங்களை முறையே கண்டுகொள்க திருவலஞ்சுழி, சுவாமிமலை, திருவாப்பாடி, திருமாந்துறை, சிதம்பரம், சீர்காழி, திருவாவடுதுறை, திருவாரூர், திருவாலங்குடி மேற்கூறிய தெய்வங்களையுடைய இத்தலங்களை அமைக்குந்தானங்களில் அமைத்துகொண்டு இத்தலம் மத்தியிலிருப்பதால் இதற்கு மத்தியார்ச்சுனமென்றும் இடைமருதென்றும் வழங்குகின்றன இவ்வரலாற்றை இப்பிரபந்தம் 132-வது கண்ணி முதல் 136-வது கண்ணிவரையினும் பொருள்கொள்க.

198-வது கண்ணிமுதல் 228-வது கண்ணிவரையினும் சுட்டிவரும் தெய்வங்களையும் அடியார்களையும்முறையே கண்டு கொள்க. விநாயகர், சுப்பிரமணியர் வீரபத்திரர், வைரவர், ஐயனார், திருஞானசம்பந்த சுவாமிகள், அப்பர்சுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள் தண்டிசநாயனார்,சேரமான்பெருமாணயனார், கண்ணப்பநாயனார், சிறுத்தொண்டநாயனார், காரைக்காலம்மையார், குங்கிலியக்கலயநாயனார், மெய்ப்பொருணாயனார், அறுபத்துமூன்று நாயன்மார்முதல் தொகையடியடியார்கள், அகஸ்தியர்,உபமன்யர், பதஞ்சலிவியாக்கிரபாதர், தவத்தர்கள், பிரமன், இந்திரன், தேவர்கள்,சூரியன்,சந்திரன்,இக்குப்பாலர்கள், பூதகணங்கள், தும்புருநாரதர், சித்தர்கள், நாகலோகத்தர், பத்தியுடையோர், வரகுணபாண்டியன், பட்டினத்துச்சுவாமிகள், ஆதிசைவர்முதலிய ஆலயத்தொண்டர்கள்.

பேதை.

விடராயவாடவராம்வெவ்வரவம்பற்றத்
தொடராமதிப்பிஞ்சுதோலா, நடமுடையார் (326)

தேறுந்திறத்தமருந்தெய்வமருதிற்பறந்
தேறுஞ்செயலிவிளங்கிள்ளை, மாறுபடு (327)

சூர்மாவென்றுள்ளந்துணிந்ததோநாமறியோ
மூர்மாவிவர்ச்சியுருதகுயி, ருர்மார் (328)

படவுடையமாரனவாவியினிதேறத்
திடமருவுருதவிளந்தென்றல், படம்விலக்கி (329)
யென்மார்பினில்லாவிரண்டுபுடைப்பன்னுய
நின்மார்பிலுற்றமைசொனீயென்பாள், பொன்மார்பத் (330)
தேறுகைப்பாரன்பரிதயம்போல்வஞ்சமுதன்
மாறுவிளையாமனத்தினு, டேற (331)
நடந்தனேன்யானீநடந்திலைபொற்பாவாய்
கிடந்தகுறையென்னென்றுகேட்பா, ளுடைந்திடமுன் ()
வல்லையேபாலிம்மரப்பாவைக்கூட்டமுலை
யில்லையேயார்கொடுப்பாரென்றழுவாள், வல்லா (333)
ரொழுதுமொருபூசையைக்கண்டின்றேகிளிக்குப்
பழுதவருமென்றோட்டப்பார்ப்பா, டொழுகுலத்தின் (334)
முற்றுதமிழ்விரகர்முன்னமணர்வாதம்போ
லுற்றுமுடிக்கப்படாவோதியாள், பற்று (335)
குடியிற்பொலிமாதர்கொண்டநாண்போலக்
கடியப்படாக்குதம்பைக்காதாள், படியி (336)
லடுக்கும்விடங்கொள்ளாவராக்குருளைப்பல்லே
கடுக்குமெனப்புகலுங்கண்ணாண், மடுக்குமுயி (337)
ரொன்றுகழிதரமற்றொன்றுபுகுமூலருடம்
பென்றுகனையுமெயிற்றடியா, டென்று (338)
வினைபெற்றமேருவல்லாவெற்பினங்கள்போனுண்
டனையுற்றறியாத்தகையாள், வனையுங் (339)
குழலும்யாழுங்கைப்புக்கொண்டோமென்றெண்ணி
யுழலுமாறோர்சொலுளாப்பா, ளழகு (340)
பருவமிரண்டெட்பருவமேயொப்பப்
பெருகவளைந்தபிணுக்க, டெருவி (341)
னெருங்கப்புகுந்துநிறைகல்வியான்றோர்
சுருங்கச்சொலன்முதலாத்தோற்றி, யொருங்கு (342)
பொருள்புணர்த்திப்பாடப்பொலிசெய்யுண்முன்னந்
தெருளுணர்ச்சிசாலாச்சிறியர், மருள்வகையிற் (343)
பாடுகின்றசெய்யுளெனப்பற்பலவாஞ்சிற்பமெலாங்
கூடுகின்றமாடக்குலமுன்னர், நீடுபெரு (344)
வீடுசிறுவீடென்றுமேன்மேலுறவியற்றிக்
கூடுமெவர்புனையுங்கோலமென, நாடுவிரற் (345)

கோலம்புனைந்துகுலாவியவருவக்குஞ்
சீலமெனவுவக்குஞ்செவ்வியிடைச், சாலு (346)

மருவுமுருவுமனலும்புனலு
மிருவுங்கொடையுமிரப்பு, மொருவா (347)

விரவும்பகலுமினனுமதியும்
புரவுமழிப்பும்பொருந்திப், பரவுசிறப் (348)

பாணுருவும்பெண்ணுருவுமாலாலமுமமுதுங்
காணுமரவுங்கலைமதியும், பேணுதிறல் (349)

யோகமும்போகமுமுள்ளாருணைபலவு
மேகமுமாயவிடைமருதர், மோகப் (350)

பெருந்தேர்கடத்திவரப்பெட்டனைமாரோடவ்
வருந்தேர்தொழுதற்கடைந்து, திருத்துமனை (351)

மார்வணங்கும்போதுவணங்கினாண்மான்முதலோர்
நேர்வணங்குந்தெய்வவுருநேர்கண்டாள், காரும் (352)

வணங்கோதியன்னைவதனமலர்நேர்பார்த்
திணங்கோதிவர்யாவரென்று, ளணங்கே (353)

யிடைமருதுவாழீசரெல்லாவுலகு
முடையர்நமையாளுடைய, ரிடையறநன் (354)

றாரும்விடைகருடனாரவிடைகொடுத்தார்
சாருந்தமைப்புணர்ந்துசார்த்தனையீன், ருருங் (355)

கொடிபுணரச்செம்பொற்கொடிகொடுத்தார்மூன்று
கடிமதிலும்வேவக்கறுத்த, வடியுடைப்பே (356)

ரம்புசுமந்தெய்யவகத்தியனார்தம்மைக்கொண்
டம்புகொடுத்தவழகரென, நம்புமிவ (357)

ரித்தெருவிற்றேரோறியேன்வந்தார்சொற்றியென
முத்தமொளிர்ந்தென்னமுகிழ்நகைசெய், தத்தரிவர் (358)

நம்மையெலாமாட்கொண்டநாம்வேட்டவையளிக்க
வம்மையொடும்வந்தாரறியென்னச், செம்மைமயி (359)

லப்படியானன்றேயையர்முடியம்புலியென்
கைப்படியுமாறுகளாயென்னச், செப்புமஃ (360)

தந்தவிடம்பெயர்ந்தாலந்தோவுருக்காண
லெந்தவிடத்துமிலைகண்டாய், மூந்த (361)

முனிதக்கன்சாபமுராரிமுதலோருந்
தனிதக்கதென்னத்தகுமோ, வனிதா (362)

யெனவதனைக்கூவமனமில்லையெனிற்கைமான்
றனையெனக்குவாங்கித்தருதி, யனையேயென் (363)
ருேதவிஃதென்னென் றுண்ணகைத்தம்மான்முழக்கஞ்
சாதமெவர்செவிகடாமேற்கும், போத (364)
வொருமுழக்கஞ்செய்யினுதிருமேயண்ட
முருமுழக்கம்யாவுமிதிற்கொப்போ, திருவே (365)
யடங்குமெனமற்றதுவுமப்படியேயலாட
ரொடங்குமரப்பாவைக்குச்சூட்டச், தடங்கொளிவர் (366)
தோண்மேலணிந்ததொடையாவதுவாங்கென்
ருண்மேற்கலைதொட்டலைத்திடலும், வாணெடுங்க (367)
ணன்னைமுனிவாள்போலாங்குமுனிந்தொருநீ
பின்னை *யெச்சதத்தர்தருபெண்ணல்லை, முன்னைத் (368)
தவம்பெரிதுவேண்டும்வாய்தன்னையடக்கென்
றவஞ்சிறிதுமில்லாதாளாற்ற, நிவந்த (369)
திருத்தேரையப்பாற்செலுத்துதரங்கண்டு
திருத்தேரனையொடுமிற்சென்றாள், பொருத்துசிலை (370)
கோட்டாதுவண்டுநாண்கூட்டாதுவாளியொன்றும்
பூட்டாதுவேடேர்ப்பின்போயினான், மீட்டுநீ (371)
ததும்புமணிக்குழைதோடாம்வருடியாடத்
ததும்புகொடிபோலுமொருத்தையற், பெதும்பை (372)

பேதை முற்றியது. கண்ணி சயஎ.

பெதும்பை.

யலரும்பருவமடுத்ததென் றுமைந்தர்
பலருமெதிர்பார்க்கவொளிர்பைம்போ, திலகுமெழின் (373)
மாடமிசைத்தவழுமாமுகிலின்ருேற்றங்கண்
டாடமனங்கொள்ளுமழகுமயி, னீடுகெடல் (374)
கூடிக்கடைநாள்குடநின் றுந்தேவர்கலந்
தேடிப்புகுதாததெள்ளமுத, நீடுசெண்பை (375)
நாட்டிறைவனுரெண்ணகத்தமணனாச்செயல்போற்
கூட்டிமுடித்தகுழலினாள், வேட்டுவெஞ்ச (376)
முந்துகளவுமுனிவுங்குடிபுகுத
வந்துவந்துபார்க்கும்வரிவிழியா, ணந்து (377)

---

* யெச்சதத்தர் = தண்டீசநாயனூர் பிதா.

கறியமைத்தார்தள்ளுங்கருவேப்பிலைபோ
லெறிகுதம்பைக்காதினியலா, ளெறிகயத்தின் (378)
கொம்புவெளிப்படன்முற்கூர்முனைதோற்றுதல்போல்
வம்புமுலைதோற்றுமார்பினா, ணம்புபல (379)
பூமாலைசூடுதற்கும்பூணாரம்பூணுதற்கு
மாமாலைதாகவமைந்துள்ளாள், காமரசப் (380)
பேறுங்குல்மாதர்பேணும்பூணென்னுநாண்
வீறுஞ்சிறிதரும்புமெய்யினா, டேருசிலை (381)
வேளாகமத்தின்விதம்புகல்வார்வார்த்தைசற்றுங்
கேளாதவள்போலக்கேட்டமர்வா, டாளாம் (382)
பெரும்பகையெண்ணுதவளைபேர்த்தான்போற்கொங்கை
யிரும்பகையெண்ணுதவிடையா, ளரும்புபெருங் (383)
காதலுடைத்தோழியர்கள்கைகலந்துசூழ்தரமிக்
காதலுடைவாவியணைந்தாடிச், சீதப் (384)
பலமலருங்கொய் துபனிமாலைகட்டி
நிலமலருமாதவிநன்னீழல், குலவுபளிக் (385)
காரப்படுத்தெழின்மிக்காக்கியதானத்தமர்ந்து
சேரப்படைக்குந்திறல்படைத்தா, னோர்தான் (386)
படையாதண்மந்தபரிகலநல்கூரு
முடையாதெதிர்ந்தமதவோங்கல், புடையாருங் (387)
கொம்புபட்டபோர்வைகொடுத்ததனியூரு
மம்புவிட்டஇன்மையதுதெரிந்துஞ், சம்பு (388)
விடாதுவாழூரும்விதிவீநாளரசு
படாதுவாழூருமருட்பற்றுக், கெடாது (389)
பதியேபசுவாய்ப்பயங்கொடுத்தவூரும்
விதியேமேனோக்குதிறம்வெய்ய, கோதிதழலுக் (390)
கன்றிப்புனற்கென்றதிசயிப்பச்செய்யூரு
மன்றிமதன்றீக்குவிருந்தாமூரு, நன்றிதரு (391)
தண்டீசர்ப்போற்றியடிதாழ்ந்தபின்னும்வேறொருவர்க்
கண்டாய்விற்போற்றவருள்காணூரு, மண்டிப் (392)
பிறந்தார்பிறவாதபேறுருநாளு
மிறந்தாரிறவாதவூருஞ், சிறந்தநலத் (393)
தாட்டைவிரும்பியடுபுலியுமாடரவு
மோட்டைபடாமலுறையூரு, மேட்டைதவிர் (394)

கன்னியொருபாற்கலந்து *காவில்கடகம்புனைந்து
மன்னியிடபத்துவனைத்தனுக்கொண், டுன்னியொரு (395)

தம்பத்துதித்தசிங்கந்தான்றருமுட்சாத்தணிவார்
கும்பத்துதித்தகுலவூரு, நம்புபொறை (396)

யாதியடையானுமரிக்கரியசெங்கமலப்
போதியையமார்பேறக்கப்பூட்டேருஞ் சோதிமணி (397)

வாய்திறந்துபாடிமணியம்மனைகொண்டு
தாதியரோடாடுஞ்சமயத்தி, லோதி (398)

மழையனையவோரணங்குவந்துபணிந்து
கழையனையசெஞ்சொற்கனியே, விழையு (399)

மொருபாற்பசப்பாயொருபாற்சிவப்பா
யிருபாலுமொன்றினியையும், பெருமான் (400)

கொடுங்கோளூர்மேயகுழகன்கொடுமை
விடுங்கோளிவியுமமர்மேலோ, ணெடுங்கா, (401)

விடைச்சுரத்துவாழ்வானிடைமருதமேயா
னடைத்திருத்தேரணித்தேநண்ணிற் றடக்கியெழு (402)

சேவிக்கவம்மெனச்சூழ்சேடியர்களோடெழுந்தா
ளாவிக்கினியாண்முனண்மின், டேவியொடு (403)

வீற்றிருக்குங்கோலம்விழிகுளிரக்கண்டுவனை
யேற்றிருக்குமங்கையிணைகுவித்தா, ளூற்றிருக்கு (404)

முள்ளங்குழையவொருத்தியிவர்பாலமர்ந்தாண்
மெள்ளவவளார்விளம்பென்றாள், கள்ளமிலா (405)

மாதேயனைத்தும்வருந்தாதுபெற்றவணு
மாதேயமற்றவளேயாதாரங், கோதேயா (406)

வன்னையவளேயுலகுக்காக்கமெனக்கோடி
பின்னையதுநாம்பெற்றபேறுகா, ணென்ன (407)

வெனையுமருகேயிருக்கவைப்பீரென்னப்
புனையுமலர்க்குழலார்பூவாய், நினையுந் (408)

தரமோவத்தாயர்சமக்கேயல்லாதப்
புரமேவயார்க்குப்பொருந்து, மூரமேவ (409)

நீயருகுமேவுவையேனீடுலகிஞகமெலாம்
போயவர்பூணுகிப்பொலியுமே, தூயமன (410)

* காவில் கடகம் = சர்பகங்கணம்.

மாணக்கஞ்சாறர்மகள்கோதையன்றிமற்றோர்
தேனக்ககோதைகளுஞ்சென்றேறி, மேனக்க (411)
* பஞ்சவடியாமேபர †வொருத்தர்கல்லன்றி
விஞ்சவெவர்கற்களுமெய்மேவுமே, துஞ்சு (412)
மிருவரெலும்பன்றியெல்லாரெலும்பும்
பொருவரியமேனிபுகுமே, மருவுசிலை (413)
வேடனெச்சில்லாதுவெங்கானுழலுமற்றை
வேடரெச்சிலுமுணவாய்மேவுமே, நாடுமறை (414)
நாறும்பரிகலம்போன்ஞாலத்தார்மண்டையெலா
நாறும்பரிகலமாநண்ணுமே, தேறுமொரு (415)
மான்மோகினியாய்மணந்ததுபோன்மற்றையரு
மான்மோகினியாய்மணப்பாரோ நான்மறைசொல் (416)
வல்லானவனையன்றிமாலாதியபசுக்க
ளெல்லாம்பிரமமெனப்படுமே, வல்லார் (417)
திருவருட்பாவோடுலகிற்சேர்பசுக்கள்பாவுந்
திருவருட்பாவென்னச்செலுமே, பொருவா (418)
வரமணிமாடத்தாவடுதுறைவாழுஞ்சுப்
பிரமணியதேசிகன்போற்பேண, வுரனமையா (419)
வெல்லாருமெய்க்குரவரென்றுவருவாரோ
நல்லாயென்சொன்னாய்நகையன்றோ, சொல்லாதே ()
யோலையிட்டவள்ளையொருத்திபோன்மாதவத்தான்
மாலையிட்டாயோநீமறவென்ன, மாலை (421)
யிடுவேனிப்போதென்றெழலுமுருகர்
தொடுமாலையன்றேசுமக்க, வடுமாறில் (422)
வேழஞ்சிதைத்ததுகொண்மேதகுழூக்கோர்மயிற்குத்
தாழவரிவித்துச்சமைந்ததுகொல், வாழி (423)
திருமான்முகத்திற் ‡றிருக்காயதுகொல்
பொருமானின்கைத்தொடையிற்பூண்பூ, வெருவாத ()
கண்ணப்பர்பாதங்கமழ்செருப்புத்தோயுமென
வெண்ணப்படுவதிதற்குண்டோ, கண்ணன்முழங் (425)

---

* பஞ்சவடி = மயிர்ப்பூணூல்.
† ஒருத்தர் = சாக்கியநாயனார்.
‡ திருக்கு = கண்.

தாளில்விசையன்முன்னுட்சாத்தியபூவோவிந்த
நாளினின்கைமாலைநறியபூ, வாளா (426)

விருத்தியென்றுளெண்ணியதுமிப்படியோவென்று
விருத்தியுறச்சென்றமனமீட்டாள், பொருத்தி (427)

மடக்கினன்வின்னுண்மதவேள்சினத்தை
யடக்கினன்றோர்ப்பினடைந்தான், விடற்கரிய (428)

செங்கைநடத்தாரப்பாற்றேர்செலுத்தல்கண்டந்த
நங்கைமனைநோக்கிநடந்தாளோர், மங்கை (429)

பெதும்பை முற்றியது. கண்ணி ௩௦௭.

(இப்பருவத்தில்)

387-வது கண்ணிமுதல் 397-வது கண்ணிவரையினும் சுட்டிவரும் தலங்களை முறையே கண்டு கொள்க.

திருக்கண்டியூர், திருவழூர், திருவானைக்கா, திருவாவடுதுறை, பந்த நல்லூர், இதனைக்கருவூரெனவும் பொருள்படும், கோடீச்சுரம், இவை கொட்டையூரெனவும் மேற்காவேரியெனவும் வழங்கிவருகின்றன. திருக்கொறுக்கை மாயூரம் இதில் தண்டீசநாயனை வழிபட்டு மற்றொரு தெய்வத்தையும் வனங்கவேண்டுமென்பதனை, ஷை மாயூரப்புராணம் நாதசன்மான வர்த்திப்படலத்திற் கண்டு கொள்க. திருவாரூர், காசி, சிதம்பரம், கும்பகோணம், திருக்கடையூர்.

மங்கை.

திரையிற்பிறவாதநெள்ளமுதமோங்கல்
வரையிற்பிறவாவயிரந், தரையிற் (430)

பிறந்தமதியமைந்தர்பேராசைகொள்ளச்
சிறந்தபசுங்காமதேனு, வுறந்த (431)

புரிகுழல்கட்டவிழ்க்கும்போதாடவர்த
மரியமனமுங்கட்டவிழ்ப்பா, டெரியமுடி (432)

செய்துமலர்சேர்த்துச்செருகும்போதேபணித்தல்
செய்யுயிருஞ்சேர்த்துச்செருகுவாள், வெய்யவிட (433)

முண்டானுமிழ்ந்தான்கொல்லோவென்றுமால்பிரமன்
கண்டானடுங்குமிருகண்ணினு, டண்டாமை (434)

கொண்டமைந்தர்நெஞ்சங் குடிபுகுந்தாடப்பொன்னூற்
கண்டதிருவூசலெனுங்காதினா, ளண்டம் (435)

வளைத்தாள்கதிர்மதியமாக்களங்கமாற்றி
முளைத்தாலனையமுகத்தா, டிளைத்தபெருங் (436)

காமரசமெல்லாங்கமழவடைத்தசிறு
தாமச்செப்பென்னுந்தனத்தினா, ளூமமறத் (437)

தன்னையறிந்துபரந்தானேயென்பான்பொருவத்
தன்னையறிந்துதருக்குவாள், கொன்னே (438)

பெருத்துமுலைகணமைப்பின்புவருத்தத்
திருத்துமெனத்தேர்ந்தவிடையாண், மருத்துப் (439)

பொதியமலைநின்றுவரப்போயேற்பாள்பின்ன
*ருதியமைதீப்போல்வதுணராண், மதிய (440)

மெழுந்துவரக்கண்வேப்பாளீதேவடவைக்
கொழுந்துபொருமென்றுட்குறியாள், செழுந்தரளக் ()

கோவைபுனைந்துகுவட்டருவியொத்ததென்று
பூவையொருத்திசொலப்புந்திசெய்வா, டாவிக் (442)

கரைகடவாதகடல்போலவன்னை
யுரைகடவாமேயுறைவாள் வரையின் (443)

பகையிந்திராணிபணைமுலைதோய்காலந்
தகையினுளங்கொள்ளுந்தகையா, ணகைசெய் (444)

மனைமுகப்பினெண்ணின்மடவாரோடெய்தி
நினையுநிலாமுற்றநின்று, புனையு (445)

முலைப்பகையாகிமுளைத்ததுணர்ந்து
தலைப்பகைகொண்டுசெங்கைதாக்கு, நிலைப்பென்னப்

பந்தடித்துமுத்தம்பலமுகத்துநின்றுதிரச்
சந்தத்தனத்துமுத்தந்தாம்பிறழ, நந்த (447)

விளையாடுபோதில்விரும்புதாய்வந்து
வளையாடுசெங்கைமடமாதே, யிளைய (448)

ரியங்குதலைமாற்றுமெண்ணமோமேலாய்
வயங்குதுறவுமடியாதோ, பயங்கொள் (449)

கருப்புவில்விகாணிற்கனகமயமான
பொருப்புவில்லியோடுபொரவோ, விருப்பார் (450)

---

* உதி=தருத்தி.

திருமங்கைகண்டறிஞர்செந்நாவகத்த
மருமங்கையாதன்மதித்தோ, வருமந்த (451)
பொன்னேமணியேபுறவேபசுமயிலே
மின்னேயிவ்வாடல்விடுகென்ன, வந்நேர (452)
மண்டம்புவனமனைத்தும்விளராமற்
கண்டங்கறுத்தகருணையான், பண்டு (453)
வெருவருமாலாதிவிண்ணோர்மெய்வலியெலாஞ்சிற்
றொருதுரும்புகொண்டளந்தவும்பன், பெருவளையைப் ()
பண்டுகுழைத்தபடிகருதாதம்மைசெங்கை
கொண்டுதழுவக்குழைந்தபிரான், மண்டுபுலா (455)
லேங்கொடுக்கமாட்டாதென்றெங்கட்குரைத்தொருவர்
தாங்கொடுக்கும்போதெல்லாந்தானுண்டா, னீங்கிடுமின்()
பொன்மேனிமாதர்புணர்திறத்தையென்றுணாத்துத்
தன்மேனியோர்பாலோர்தையல்வைத்தான், பன்மாடக் ()
கூடல்வழுதியடிகொண்டுபலவுயிர்க்குஞ்
சாடலமையாத்தழும்பளித்தா, னூடு (458)
மொருவன்றலையையுகிராற்றடிந்து
பொருவில்கழுவாயெவர்க்கும்பூட்டுந் திருவ (459)
னறிந்தடிமைசெய்வார்பொன்னுடையுடுக்கச்
செறிந்தசிறுதோலுடுக்குஞ்செல்வ, னறந்தழைய (460)
வெல்லாமுடையானிறத்தல்பிறத்தலிவை
யில்லானென்றெல்லாருமேத்தெடுப்பான், வல்ல (461)
விடைமருதவாணனிமைக்குந்திருத்தே
ரடையவணித்தேகண்டணைந்தாள், புடைவிரவு (462)
தையலாரோடுதடங்கைகுவித்தாண்மாலு
மையலார்மேனிவனப்புணர்ந்தா, ளையோ (463)
முளையாதகாமமுளைத்ததுசெங்கைவில்
வளையாமலர்சொரிந்தான்மார, னிளையா (464)
ளுடுக்கைநெகிழவுறுவளைகைசோர
விடுக்கையடைந்துமெலிந்தாள், கடுக்கை (465)
புனைவான்கடைக்கண்பொருத்தினன்போல
நினைமூரன்றேற்றிநெடுந்தேர், தனையப்பா (466)
லுந்தினன்வேளுமுடன்றொன்றுபத்துநூறுமேற்
சிந்தினனுகிச்செருச்செய்தான், முந்தித் (467)

தலையமைந்ததோழியர்கைத்தாங்கத்தளரு
தலையடைந்தாண்மாளிகையுட்சார்ந்தா, ணிலைநின்று (468)
காதளவோடுங்கருங்கண்ணுமெல்லாருஞ்
சீதளமெல்லாஞ்செயப்புகுந்தார், போத (469)
வவைக்குப்பொருளாயயர்தல்கண்டுகாமச்
சுவைக்குத்தகுதோழிசொல்வா, ளவைக்குந் (470)
தகச்செய்தானீங்குந்தகாமைசெய்தாற்பெண்கா
ணகச்செய்வதாகுநலமோ, மிகப்படுத்த (471)
மாந்தளிரைநீக்கிமகாலிங்கமேயமரு
தாந்தளிரைச்சேர்த்தாலறமுண்டே, காந்த (472)
வணிதரளம்போக்கியமார்பெருமான்கண்
மணிபுனையிற்சாந்தம்வருமே, பிணிசெய் (473)
பனிநீரைப்போக்கிப்பரமர்சடைமேய
பனிநீரைப்பெய்தல்பயனே, கனிசந் (474)
தனம்போக்கியையர்தவளப்பொடியின்
மனம்போக்குமின்மறுக்கமாட்டாள், சினந்த (475)
பலமொழியாலென்னபயன்மருதனென்னு
நலமொழியேயென்றுநவில்வீர், குலவுசெய்ய (476)
வாம்பன்மலரையகற்றியமையமரு
தாம்பன்மலரையணிந்திடீர், மேம்படிவை (477)
யல்லாற்பிறிதுசெயலத்தனையுந்தக்கன்மக
மொல்லாதேயாயதிறமொக்குமே, யெல்லா (478)
மறிவீறென்றோதவறைந்தமொழியெல்லாஞ்
செறிநோய்மருந்தாய்த்திருந்த, வெறியார் (479)
தடந்தார்குழலியுயிர்தாங்கியமர்ந்தாள்
விடந்தானெனப்பொலியும்வேற்கண், மடந்தைதவி()

மங்கை முற்றியது. கண்ணி-௫௰௪.

மடந்தை.

முற்றிச்சிலைவேண்முதுசமராடற்குயர்த்த
வெற்றிக்கொடியின்விளங்குவாள், பற்றுமல (481)
ராங்கோலுடையானரசுநடாத்திடக்கொள்
செங்கோலனையபெருஞ்செவ்வியா, டிங்கட (482)
குடையான்மகுடமெனுங்கொங்கையளன்றனே
யுடையானெனப்புகழற்கொத்தா, ளிடையா (483)

வனையனினிதமருமத்தாணியென்னுந்
தனைநிகரிலல்குற்றடத்தாள், புனையுங் (484)

கிழக்குமுதலெத்திசையிற்கிட்டினுஞ்சோர்வித்தாள்
வழக்கறுக்கும்பார்வைவலியாண், முழக்கறிவி (485)

னெய்ப்பெய்தருமுனிவரெல்லார்தவங்களையும்
வாய்ப்பெய்திடுங்கவவுவாணகையாள், பார்ப்பினிய (486)

வோதியாஞ்சைவலத்தாலொண்முகமாந்தாமரையாற்
கோதியலாமைக்கட்குவளையா, லாதரச்செவ் (487)

வாயாங்கழுநீரால்வண்காதாம்வள்ளையா
னேயார்கபோலமெனுநீர்நிலையா, லேயு (488)

மதரமாஞ்செங்கிடையாலங்கழுத்தாஞ்சங்கால்
பொதியுமுலையாம்புற்புதத்தா, லிதமாய (488)

வுந்தியெனுஞ்சுழியாலொத்தமடிப்பாமலையாற்
சந்திபெறுமுழந்தாண்ஞெண்டா, லுந்துகணைக் (490)

காலாம்வராலாற்கருதப்பொலிந்தபுறங்
காலாமொளிர்பொற்கமடத்தா, லேலாவெங் (491)

காமவிடாய்பூண்டுகலங்காடவர்மூழ்கி
யேமமுறும்வாயியெனப்பொலிவா, டாம (492)

மணிநிலாமுற்றத்தளவிலார்சூழ
மணிநிலாவெண்ணகையாள்வைகிக், கணிதமறத் (493)

துன்றுபன்மேலண்டத்தொகையுங்கடந்தப்பாற்
சென்றுபொலியுந்திருமுடியு, மொன்றுதிற (494)

*லென்றுமதியுமிவையென்னபகலிர
வென்றும்விளக்குமிருவிழியு, நன்றமைய (495)

மும்மையுலகுமுகப்பவேதாகமங்கள்
செம்மையுறவிரித்தசெவ்வாயு, மம்ம (496)

வடுக்குமிரவுமவிரும்பகனு
முடுக்கும் †வளிவீசுமென்மூக்குந், தடுப்பரிதா (497)

யெந்தப்புவனத்தெவர்கூறினுமஃ
தந்தப்பொழுதேயோரஞ்செவியு, முந்தவரு (498)

---

* என்று=சூரியன்.

† வளி=காற்று அதாவது சந்திரகலை சூரியகலை.

காவருநங்கூற்றடங்குகாராகிரகமென்று
தேவர்பரவுந்திருக்கழுத்து, மேவு (499)
பெருந்திசைப்போக்கன்றிப்பிறிதில்லையென்னப்
பொருந்திவயங்கும்புயமுந். திருந்திய (500)
விண்ணுலகுங்கீழுலகுமேல்கீழுமாகவைத்து
மண்ணுலகமேயாய்வயங்கரையு, நண்ணு (501)
மெழுபாதலமுமிகந்துமால்கண்டு
தொழுமாறிலாத்தாட்டுணையு, முழுதாள்வோன் (502)
மன்னுமிடைமருதவாணனருட்பெருமை
யுன்னுந்திறத்தாளொருத்தியைப்பார்த், தென்னே (503)
யிடைமருதென்றோதுமிதன்பெருமையாரே
யடையவகுப்பாரணங்கே, யுடையவரோ (504)
பேணுமருதின்பெருமையெவருரைப்பார்
காணுந்தரமில்கயிலைகாண், பூணுமன்ப (505)
ரொல்லாருநாவரசரொன்னவடநாட்டிற்
செல்லாதிருக்கத்திருந்தியதா, னல்லா (506)
யிதுகண்டநாமற்றெதுகாண்டல்வேண்டு
*மதுகண்டவராயமைந்தேஞ், சதுர (507)
ருருத்திரர்களோர்பன்னொருகோடியாரும்
பொருத்தமுறவந்துபோற்றுந், திருத்தருசே (508)
ரிந்தத்தலமேயதித்தலமான்மியமற்
றெந்தத்தலத்திற்கியைந்துளது, நந்த (509)
விழிதலையொன்றனைக்கையேந்தியொரு † வேந்த
னழிதுயர்பூண்டதெங்கென்றாயா, யிழிதருநாய்க் (510)
சட்டந்திருமுற்கலப்பதோவென்றிறைகை
யிட்டமுடனெடுத்ததெத்தலத்தில், வட்டமதில் (511)
சூழுமதுராபுரியிற்றொட்டபழிநீக்கி
வாழும்படிபுரிந்தமாத்தலம்யா, தேழுலகும் (512)
போற்றுமொருதன்னுருவைப்பொன்னுருவினிற்புகுத்தி
யேற்றும்பெருமையுற்றதெத்தலங்காண், கூற்றுமஞ்சு ()
மிந்தத்தலத்துதிக்கவெத்தவஞ்செய்தோமென்று
சந்தக்குயின்மொழியாடானுரைத்து, நந்தக் (514)

---

* அது = கைலாயம்
† வேந்தன் = வரகுணபாண்டியன்.

களிக்கும்பொழுதுகசிந்தார்க்கேயின்ப
மளிக்கும்பிரான்றேரணுக, வெளிக்கணைந்த (515)
மாதரொடும்வந்தவணங்கினள்காண்பார்க்கு
*மோதமளிக்குமுகங்கண்டாள், காதற் (516)
றிருத்தோளுங்கண்டாடிருமார்புங்கண்டாள்
பெருத்தாண்மயக்கம்பெருவே, ளுருத்தான் (517)
பல்கணைதொட்டெய்தானப்பைங்கொடிதான்சோர்ந்து
சிலதியர்மேல்வீழ்ந்துதிகைத்தா, ளல்மருவா (518)
ளென்னையுடையானிவள்செய்கைநோக்கானாய்
நன்னயத்தேரப்பாணடத்தினான், பின்னைத் (519)
தொடர்ந்துசெலுமதனன்றேகைமேற்பல் †வேல
வடர்ந்துசெலப்பெய்தகன்றான், கிடந்தவளாய்ச் (520)
சோருங்கருங்குயிலைத்தோழியர்கள்கைத்தாங்கிச்
சாருமனையிற்றகப்புகுத்தி, நேரு (521)
மலரணையின்மேற்கிடத்தியான்றபனிநீ
ருலர்தரமேன்மேலுமூற்றிக், குலவுநறுஞ் (522)
சாந்தமுங்கோட்டித்தகுசிவிறிக்காற்றெழுப்பக்
காந்துவதுகண்டுகலங்கினாண், மாந்தளிர்மு (523)
ளுயவுபசாரமனைத்துஞ்செயலொழிமி
னேயமுளதேலென்பானிவீறொன்று, தூய (524)
மணிவாய்திறந்தாண்மருதரோயும்மைப்
பணிவாருக்கீதோபயன்கா, ணணியல் (525)
சடைமேலதுகொடுத்தாற்றத்துதினாக்கங்கை
விடைமேலீர்நும்மைவெறுப்பா, ளடையு (526)
மிடத்தோளதுகொடுத்தாலெவ்வுலகுமீன்ற
மடப்பாவைகோபநுமைவாட்டு, மடுத்த (527)
வலத்தோளணியன்மருவவளித்தாற்
சொலத்தானொருவருண்டோசொல்லீ, ருலத்துயர்தோள் ()
வெய்யசிலையாளுன்மென்றுமிழ்வதாயிருந்தாற்
செய்யமணிவாய்திறந்தருள்வீ, ராயமோ (529)
யார்த்தார்களைழவண்டமைத்தொருபூத்தொடுக்கப்
பார்த்தாவலவோகண்பார்த்தருள்வீர், சேர்த்தகதிர் (530)

---

* மோதம்=சந்தோஷம்.
† வவு=அம்பு.

பன்மோதினீருயிரைப்பாற்றிவெல்லென்றுதலை
கன்மோதினாலன்றோகைதருவீர், நன்மையெனுங் (531)
கோளெறிந்ததந்தைகொடுவினையைநோக்கியவன்
றாளெறிந்தபோதன்றோதாரருள்வீ, ராளும் (532)
பிரியமுடையீரொன்றுபேரருள்செய்வீரொன்
பிரியுமுயிர்தாங்கியிருந்தா, ளரிவை (533)

மடந்தை முற்றியது கண்ணி-௪௰௫.

இப்பருவத்தில் 493-வது கண்ணி முதல் 502-வது கண்ணி வரையினுஞ் சிவபெருமானது விராட்டு வடிவங்கூறியவற்றைக்கண்டுகொள்க.

அரிவை.

யிளையான்குடிமாறநொய்ப்பொழிப்பான்சென்று
முளைவாரும் *போதுநிகர்மோகம், விளைகுழலா (534)
டேவர்க்கூறுக்கினைத்தேர்வலெனுங்கண்ணப்பர்
கோவச்சிலைநேர்கொளுநுதலாள் காவற்செய் (535)
நெல்லுண்டாள்பாலுண்சேய்நீக்கலறமென்றேற்றார்
கொல்லுண்டவாள்போற்கொடுங்கண்ணாள், சொல்லரசர்()
பேராலப்பூதிப்பெயராரமைத்ததடத்
தேராரும்வள்ளையெனுஞ்செவியாள், சீரார் (537)
கணநாதர்நந்தவனக்கட்சண்பகம்போன்
மணநாறுநாசிவடிவாள், புணருமருள் (538)
வாயிலார்தொன்மயிலைவாரித்துறைப்பவளச்
சேயிலார்ந்தோங்குகுணச்செவ்வாயா, ணேயமுற (539)
முன்னங்கண்ணப்பர்முறித்தமைத்தகோற்றேனி
னின்னஞ்சுவைகூருமின்மொழியா, ளன்னம் (540)
பயில்கடனாகையதிபத்தர்துறையிற்
பயில்வெண்டரளமெனும்பல்லா, ளியலருளப் (541)
பூதியார்முன்னம்புரிந்ததடக்கமலச்
சோதியாமென்னச்சுடர்முகத்தா, ளாதியருட் (542)
சம்பந்தமேவவொருதண்டீசனார்நிறைத்த
கும்பந்தாமென்றேத்துகொங்கையாள், வம்பவிழ்தா (543)

---

* போது= காலம் அதாவது மழைக்காலிருளென்று பொருள் கொள்க.

ராணுபர்முன்னமரிந்தெடுத்துக்கொண்டவே
யேநாமென்றேறுதமிணைத்தோளா, ளாணுத (544)
மூலருறையநிழன்முற்றக்கொடுத்துவப்பி
ணுலரசின்பத்திரம்போலல்குலாண், மேலா (545)
யிலகியசம்பந்தரோடேற்றவமணர்
குல்மெனத்தேயுமருங்குல்லா, ணல் *வரசாஞ் (546)
சிட்டாமுதுசெயத்திங்களூர்நாவரசு
தொட்டகதலித்துடையினு, ளிட்ட (547)
மடுத்தவதிபத்தரங்கையெடுத்து
விடுத்தவரால்போற்கணைக்கால்வீறுண், மடுத்தவருட் ()
கண்ணப்பர்கையிற்கலந்ததவநாய்நாவின்
வண்ணப்பொலிவின்வருபதத்தாள், வண்ணஞ் (549)
சிறக்குமொருசித்திரமண்டபத்தி
னிறக்குங்குழலார்நெருங்கப், பறக்கு (550)
மளியினங்கள்பல்லவளகத்தலம்பக்
களிமயிலிற்சென்றுகலந்து, தெளிய (551)
விருக்கும்பொழுதோரெழில்விறலிவந்து
பருக்குமுலையால்வளைந்தபண்பின் முருக்கிற் (552)
சிவந்ததாடாழ்ந்துதிருமுன்னர்நிற்ப
நிவந்தகருணையொடுநேர்பார்த், துவந்து (553)
வருபாண்மகளேவடித்தகொளைவீணை
யொருவாதுகொண்டருட்பேறுற்றார், திருவாய் (554)
மலர்ந்ததிருப்பாட்டனைத்தும்வாய்ப்பப்பாடென்ன
வலர்ந்தமுகத்தினவளு, நலந்தழையும் (555)
‡ பத்தர்யாழ்ப்போர்வையப்பாற்பாற்றியெதிரிருந்து
வைத்தநரப்புவளந்தெரிந்து, புத்தமுத (556)
வெள்ளம்படர்ந்தென்ன § வேணுபுரநின்றெங்க
ணுள்ளம்படர்ந்தவொருதமிழும், பள்ளப் (557)
பரவைசுமந்தமணர்பாழியிற்கல்வீழ்த்தா
தரவையடைந்ததமிழு, முரவங் (558)
குரித்தவாரூர்தெருவிற்கூற்றுதைத்தகஞ்சஞ்
சரித்திடச்செய்ததமிழும் பரித்தவுயிர் (559)

---

* அரசாஞ்சிட்டர்=அப்பர்சுவாமிகள்.
‡ பத்தர்=சுரைப்பத்தர்.
§ வேணுபுரம்=சீர்காழி.

தன்னடியேவேண்டத்தருபரமற்கோர்வழுதி
தன்னடிவாங்கித்தருதமிழு, மன்னுபொது (560)
வாடியருளினமர்தலங்கட்கொவ்வொன்றாப்
பாடியருளியவெண்பாத்தமிழு, நீடியதோர் (561)
பேயேயென்றோதப்பிறங்கியுநம்பெருமான்
றாயேயென்றோதத்தருதமிழு, மாயோர்பா (562)
னீங்கலரியநெடுந்தகைநீங்காதமரு
மோங்கன்மிசையேறுலாத்தமிழுந், தேங்கரும்பி (563)
னுற்றோதரிதாமுறுசுவையோபற்றறுப்பார்
பற்றோவென்றோதுமிசைப்பாத்தமிழு, முற்றுமருள் (564)
பூண்டுவாழ்த்தோதும்புராணன்விருப்புறப்பல்
லாண்டுவாழ்த்தோதுமருந்தமிழும், வேண்டு (565)
பிறவுமெடுத்தோதப்பெருமருதவாணற்
குறவுநனிசிறந்தோங்கத். துறவு (566)
சிதைக்கும்விழியாள்சிறந்தமருங்காற்கூற்
றுதைக்குந்திருத்தாளுடையான், பதைப்புற் (567)
றதிரோதையிற்பல்லனைத்துங்கொட்டுண்ணக்
கதிரோன்முகத்தறையுங்கையா, னெதிராநின் 568)
றெள்ளுந்திறம்படைத்ததென்னென்றொருதலையைக்
கிள்ளுந்திறம்படைத்தகேழுகிரான், றுள்ளுமொரு (569)
மீனவிழிசூன்றவிரலான்திரிபுரங்கள்
போனவெனப்புரியும்புன்னகையான், வானம் (570)
வழுத்துமிடைமருதவாணன்றேர்தேமாப்
பழுத்துவிளங்குமவட்* பம்ப, வெழுத்து (571)
முலையாளெழுந்துதிருமுன்னரடைந்தாண்
மலையாளனுந்தாயைவாமத், தலையாள் (572)
பெருமான்றிருவுருவம்பெட்புற்றுக்கண்டா
டிருமானொருத்திகொலோசெய்தா, ளருமைப் (573)
பெருந்தவமென்றாள்பெருமூச்சுயிர்த்தாள்
வருந்தமதவேள்விடுக்கும்வாளி, பொருந்தாளாய் (574)
நேரேதொழுதநிலாவைவருத்துகவென்
றாரேசுமப்பாரறைதிரே, பாரறிய (575)

---

* பம்ப=நெருங்க.

வன்றுதேய்த்தாரென்றறைவாரதைப்புதுக்க
வின்றுதேய்த்தால்வருவதெப்பழியோ, குன்று (576)
குழையக்குழைத்ததிறங்கொள்ளமுலைக்குன்றுங்
குழையக்குழைக்கினன்றோகூடுங், கழைமதவே (577)
ளங்கமெரித்தீரவன்சிலைநாணம்பாய
வங்கமெரிப்பதனுக்காற்றீரோ, பொங்குவளி (578)
யம்புபுணரவமைத்தீர்தென்காற்றைமத
னம்புபுணரவமைத்திலீ, ரம்பு (579)
புணரினதுவேறாகிப்போழுமோமேனி
யுணரினஃதெவருக்கொப்பாங், குணமிலா (580)
வந்தக் * குரண்டத்திறகமைத்தற்காயசடை
யிந்தக்குயிலிறகையேலாதோ, முந்தத் (581)
தனிநீரடக்குஞ்சடாமுடியில்வெய்ய
பனிநீரடக்கப்படாதோ, முனிவிடமா (582)
மன்னவிருளையடக்குந்திருக்கண்ட
மின்னவிருளடக்கவெண்ணாதோ, சொன்னமைக்கு (583)
வாய்திறவீர் † பூம்புகார்வாழ் ‡ வணிகரில்லத்து
வாய்திறவீரென்னில்வருந்தேனே, மாயவனார் (584)
கண்ணைச்சுமந்தகழற்காலீர்சென்னிமேற் (முழு)
பெண்ணைச்சுமந்ததென்னபேதைமைகாண், மண்ணை ()
துண்ணும்விடையீரென்றுரையாடிநிற்கும்போ
தெண்ணுமுடையாரிளநகைசெய், தண்ணுகன (586)
கத்தேரையப்பாற்கடாவினாரப்போது
முத்தேர்நகைமாதுமூர்ச்சித்தாள், சித்தம் (587)
§ பருவந்தழிதருங்காற்பாங்கியர்கடாங்கித்
திருவந்தமாளிகையிற்சேர்த்து, மருவந்த (588)
பாயற்கிடத்திப்பசுஞ்சாந்தளாய்ப்பனிநீ
ரேயப்பொருத்தியிருந்தெல்லோரு, நேயத் (589)
திடைமருதவாணனிடைமருதவாண
னிடைமருதவாணனெனவு, மடையு (590)

---

* குரண்டம்=பகாசுரனென்னும் ஓர் கொக்கு.
† பூம்புகார்=காவிரிப்பூம்பட்டினம்.
‡ வணிகரில்லம்=இயற்பகை நாயனார் கிரகம்.
§ பருவந்து=துன்பம்.

மரிவையுயிர்தாங்கியாற்றியொருவாறு
பரிவைவிடுத்தமர்ந்தாள்பைம்பூட், டெரிவைமறை (591)

அரிவை முற்றியது கண்ணி—ருமஅ.

இப்பருவத்தில் 557-வது கண்ணி முதல் 566-வது கண்ணி வரையினுஞ் சுட்டி வருந்தமிழ்களை முறையே கண்டுகொள்க.

திருஞானசம்பந்தசுவாமிகள் திருமுறை.
அப்பர்சுவாமிகள் திருமுறை.
சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுறை.
திருவாசகம்.
காடவர்கோனாயனார்சேத்திரவெண்பா.
காரைக்காலம்மையார்மூத்த திருப்பதிகம்.
சேரமான்பெருமானாயனார் திருக்கைலாய வுலா.
திருவிசைப்பா.
திருப்பல்லாண்டு.
பெரியபுராணமுதல் மற்றையபுராணங்கள்.

தெரிவை.

வாசியான்கண்டம்வதிவதைநூற்றேமணநெய்
பூசிமுடித்தன்னபுரிகுழலாண், மாசிலொளிப் (592)

பாதிமதியம்படர்சடைநீத்திங்கமரு
நீதியெவனென்னுநெற்றியா, ளாதிநாள் (593)

விண்டகமருள்விடேலென்றெலிதோற்றக்
கொண்டவடுவகிர்போற்கூர்ங்கண்ணா, ளண்டமுழு (594)

தீன்றவொருபாற்கையெடுத்தமலரைந்துளொன்றாய்த்
தோன்றவிளங்குஞ்சுடர்முகத்தா, ளானற (595)

நெடியகடற்புகுந்துநீள்வலைவீசிக்கொள்
கடியசுறுத்தலைபோற்காதாண், முடிவிற் (596)

குருவடிவங்கொள்ளக்குறித்தடியர்சாத்து
மருமலரேபோலுஞ்செவ்வாயா, ளொருவரிய (597)

தன்போல்வெருதுமதன்றன்னுனென்றேவெறுத்த
கொன்பூவணையகொடிமூக்கா, ளன்பர்வரு (598)

நாண்முன் குருகாவூர் நன்கமைத்தநீர்நிலையே
காணென்றுணாக்குங்கபோலத்தாள், யாணரிசை (599)

மூட்டுமிருவர்முயன்றமர் தானத்தழகு
காட்டுங்குழைபோற்கழுத்தினு, ணூட்டுமொரு (600)

மூத்தென்றுரைக்குமுயன்றுதலைனயீன்றதா
யொத்ததெனவுரைக்குமொண்டோளா,ளத்தவுடம் (601)

பேத்தமிளிர்பச்சையினிதளித்ததானத்துப்
பூத்தசெய்யகாந்தள்பொரூஉங்கையாள், கோத்தபெரு ()

வெள்ளத்துத்தற்றோற்றமேன்மிதந்தகும்பமென்றே
யுள்ளத்தகும்பொன்ஞெளிர்முலையாள், வள்ளற் (603)

றரத்தின்மரீஇயதனக்குநிழனல்கான்
மரத்தினிலைபோலும்வயிற்றாள், புரத்தின் (604)

மடங்கூர்முனிவர்மடிக்கவிட்டபாம்பின்
படம்போலகன்றநிதம்பத்தா, டடங்காமர் (605)

வாழ்வளங்கூர்நீவிவனத்தினிழல்கொடுத்துச்
சூழ்கதலியென்றுசொலுந்தொடையா,ளாழ்கடல்சூழ் (606)

வையம்புகழ்காஞ்சிவைப்பினிழற்றுஞ்சுதச்
செய்யதளிர்போற்சிவந்தசிறடியாள், பையரவ (607)

வல்குன்மடவாரளவிலர்தற்சூழ்ந்து
புல்கும்வகையெழுந்துபொமமன்முலை, மெல்கு (608)

மிடைக்கிடுக்கண்செய்யவிலங்குமணிப்பந்தர்
படைத்தநிழலூடுபடர்ந்து, புடைத்த (609)

விளமாம்பொதும்பரிடைக்கனகத்தாற்செய்
வளமாருங்குன்றமருவி, யுளமார் (610)

விருப்பினமர்ந்துவலைமின்ஞருட்கொங்கைப்
பருப்பத்தோர்தோழிமுகம்பார்த்துத், திருப்பதத்தான் ()

முன்னமரக்கன்முடிகணெரித்தார்பச்சை
யன்னங்கலப்புற்றமரிடத்தார், சொன்ன (612)

வரைகுழைத்தாராடல்வரம்பில்லையேனு
முரைசிறக்குஞ்சில்லவுரைப்பா, மரைமலர்க்கண் (613)

விண்டுபணிந்திரப்பவேதாவைக்காதலனுக்
கொண்டுமகிழ்தல்குறித்தளித்தார், வண்டு (614)

படுமலரோன்றாழ்ந்திறப்பப்பைந்துழாயண்ண
ஞெடுமைகவாய்த்தோன்றுவரநேர்ந்தார், வடிவின் (615)

மலரோன்றெடுத்திட்டமாரவேண்மேனி
யலர்செந்தழலுக்களித்தார், பலக (616)
லெடுத்துநாடோறுமெறிந்திட்டுவந்தார்க்கின்ப
மடுத்தபெருவாழ்வளித்தார், கடுத்த (617)
சிறுவிதியென்பவன்முன்செய்புண்ணியத்தைத்
தெறுதொழின்மாபாதகமாச்செய்தா, ருறுதிபெறக் (618)
கண்ணியதண்டீசர்புரிகைத்தமாபாதகமா
புண்ணியமேயாகப்பொருத்தினார், திண்ணியமா (619)
வென்றிக்கனகவிலங்கல்குழைத்தாரொருபெ
ணொன்றித்தழுவவுரங்குழைந்தார், நன்று (620)
மொருபாலொருவடிவமுற்றாரென்னேமற்
றொருபாலொருவடிவமுற்றார், வெருவாத (621)
வெய்யபகையாம்விடவரவுமம்புலியுஞ்
செய்யசடாடவியிற்சேரவைத்தார், வையம் (622)
பழிச்சுபெருவாழ்வுபழிச்சர்களிப்பா
ரிழிச்சுதலையோடேற்றிரப்பார், வழுத்துசித (623)
நல்லாடையும்புனைதனாட்டுவார்மற்றுஞ்செங்
கல்லாடையும்புனைதல்காட்டுவார், பொல்லாத (624)
மாலூருமூன்றூர்மடியவளங்கெடுத்தார்
நாலூர்பெருகுவளநன்களித்தார், மேலா (625)
ரருத்திசெயப்பொலியுமையாறிகவா
ரிருத்தியவாறுறிகப்பார், விருத்தி (626)
மணம்வீசுகைதைமலரைமலையார்
மணமிலெருக்குமலைவார், குணமாய (627)
பொன்னுமணியும்புனையார்நரம்பெலும்போ
டின்னும்பலவுமெடுத்தணிவார், முன்னமா (628)
றேடப்பதங்காட்டார்தேடிப்போயாரூரன்
பாடற்றலைமேற்பதித்திடுவார், நாடுமிவ (629)
ராடலெவராலறியப்படுமென்று
நாடலுடையாணவின்றிடுங்கா, னீடு (630)
மலைவந்தாலென்னமருதர்திருத்தேரத்
தலைவந்ததுகண்டாடாவா, னிலைவந்த (631)
வண்ணமடைந்தாரின்மகிழ்ந்தாள்விரைந்தெழுந்தா
ளண்ணன்மணித்தேர்முனணுகினா, ளெண்ணம் (632)

பதிக்குந்திருமுகமும்பாரத்திண்டோளுங்
கதிக்குமகன்மார்புங்கண்டாள், விதிக்க (633)

முடியாவனப்புமுழுதுந்தெரிந்து
கொடியாயிடைகைகுவித்தா, ணெடியானு (634)

நான்முகனுமின்னுநனுகருமெய்ப்பேரழகைத்
தான்முகந்துண்ணத்தலைப்பட்டாள், மான்முகந்தா (635)

ளந்தப்பொழுதேயடல்வேள்கழைச்சிலைநாண்
கந்தப்பகழிபலகாற்றியதி, முந்தத் (636)

தடுமாற்றங்கொண்டாடவாமயக்கம்பூண்டா
ணெடுமாற்றம்பேசநினைந்தாள், கொடுமை (637)

மடுத்தசெயலின்மருதவாணரேநும்மை
யடுத்தவெமக்கென்னோவளித்தீ, ரடுத்துநுமைக் (638)

கும்பிட்டகைமலர்கள்கோலவரிவண்டிழத்த
னம்பிட்டமாமோகவிலுவீர், நம்பினுமைக் (639)

(வின்றிக்)

கண்டவிழியழகுகாட்டுங்கரியழியக்
கொண்டன்மழைபொழிதல்கொள்கைகொலோ, தண்ட

காணும்விருப்பங்கடவநடந்தபதம்
பூணுநடையிழத்தல்பொற்பாமோ, பேணு (641)

முனைமைப்புகழ்ந்தசெவ்வாயுறநகைப்புமேவி
யமைத்தவுணுநீங்கலறமோ, வமைத்தடந்தோள் (642)

செய்யநிறநுந்தோள்சேரநினைந்ததற்குப்
பையப்பசந்தபடியென்னே, யையரோ (643)

வேய்முத்தாநும்மைவிரும்பியவென்கொங்கைசுட
லாய்முத்தஞ்சூடலடுக்காதோ, வாய்தோ (644)

ணிதியமலையைநினைத்தவெனையிந்தப்
பொதியமலைக்கால்வருத்தப்போமோ, துதியமைநும் (645)

பார்வையடைந்தேற்குப்பனிமதியம்வேறுபட்டுச்
சோர்வையடையத்தழலாய்த்தோன்றுமோ, நீர்செ (646)

யருள்யாவருக்குமருளாய்முடிய
மருளாயெனக்குவருமோ, தெருளாமற் (647)

காதலித்ததன்றேகருணையீர்நும்மழகின்
காதலொருத்திக்கேகாணியோ, வாதலுற (648)

வொன்றுமுரையிருரைத்தால்வருபழியென்
றென்றுபலவுமெடுத்தோதிக், கன்று (649)

கழலவிழிமுத்தங்கழலமனமுஞ்
சுழலவிழுந்துதுடித்தா, ளழலொருகை (650)
யேந்தினுனென் றுமிசையானுய்த்தேர்நடத்த
வேந்தினுராகியிகுளேயரிற், போந்தார் (651)
விருப்பமவளிமிசைக்கிடத்திவெய்ய
வுருப்பந்தவிர்த்திடுதலுன்னிப், பொருப்பா (652)
மிடைமருதின்சீருமிடைமருதமேவ
லுடையதலச்சீருமுவந்த, புடைவிரவு (653)
தீர்த்தப்பெருஞ்சீருஞ்சேவுகைக்குமாமருத
ரோர்த்தபெருஞ்சீருமெடுத்தியம்பப், போர்த்தமயல் (654)
வாரிக்கொருபுணேயாய்மற்றவைவாய்ப்பசச்சற்றே
மூரிக்குழலாண்முகமலர்ந்தாள், பேரிளம்பெண் (655)

தெரிவை முற்றியது. கண்ணி-சூ௰௩.

பேரிளம்பெண்,

ணென்பாளொருத்தியிளம்பருவத்தானேயென்
றன்பாலழைக்கவமைந்துள்ளா, ணன்புவியோர் (656)
நாடுகதிருதயநாழிகையைந்தென்னுங்காற்
கூடுமிருட்டன்னகுழலினு, ணீடு (657)
கதிருதயமாதல்கருதியடங்கு
முதிருமதிபோன்முகத்தாள், பிதிர்வறவெங் (658)
கண்ணூர்மைதீட்டுகென் றுகைகளுக்கோர்வேலேயிட
லெண்ணுதிருக்குமிணைவிழியாள், பண்ணூர்பொன் (659)
னூலையன்றிவேறுவேறுள்ளனவெலாமணிதன்
மாலேமறந்தவடிகாதாள், சாலுமடைப் (660)
பையேந்துவமென் றுபண்பினுமிழ்காற்சிலர்தங்
கையேந்துசெய்யகனிவாயாள், மெய்யே (661)
முடியவுத்தராசங்கமுன்னுவதல்லாது
தொடியில்விருப்பமுறுத்தோளாள், கொடியிடைக்குச் ()
சேரவருத்தந்திருத்தியதாலுட்பெருநாண்
கூரமுகஞ்சாய்ந்தகொங்கையா, ளாரமுலே 663)
தாந்தளர்முற்சோராதுதாங்குஞ்சலாகையென
வாய்ந்தவுரோமமணிவல்லியா, டோய்ந்தமையக் (564)
கூடுமோர்பேழைகுறித்துத்திறக்கவெழுந்
தாடுபாம்பின்படம்போலல்குலா, ணீடுகண்டை (665)

யொன்றேகொள்வீரரொளிர்கால்பொருவப்பூ
ணொன்றேயுவக்குமொளிர்தாளாள், குன்றே (666)

யிணையுமுலைத்தோழியரெண்ணில்லார்நெருங்க
வணையுமொருவாவியருகே, பிணையுங் (667)

குளிர்பந்தர்சூழ்ந்துகுலவநடுவே
ணொளிர்மண்டபத்தேயுறைந்தாள், களிகூரச் (668)

செவ்வாய்திறந்தாளோர்சேடிமுகம்பார்த்தா
ளெவ்வாயும்வாயான்சீரேத்தெடுப்பா, ளொவ்வா (669)

மருதவனத்தன்மலைமகட்குமாற்கு
மொருதவனத்தனுடையான், கருது (670)

திருத்தவனம்பன்சிலையெடுத்தான்றேம்ப
விருத்தவனம்பணிறைவன், பெருத்த (671)

பருப்பதமுள்ளான்பணியார்க்குக்காட்டத்
திருப்பதமுள்ளான்சிவன்மால், விருப்பன் (672)

றுருத்தியிடத்தான் றுணையாகமேய
வொருத்தியிடத்தானொருதன், விருத்தியற (673)

லாலங்காட்டத்தனடல்காட்டினான்வளங்கூ
ராலங்காட்டத்தனருட்பெருமான், சீல (674)

விருப்புத்தவரான்மிகப்புகழ்வான்மேருப்
பொருப்புத் *தவரான்புராணன், சருப்புவயற் (675)

கச்சிப்பதியான்கனிந்துருகார்செய்பூசை
யிச்சிப்பதியானிலையென்பா, னச்சன் (676)

வெருவாவிடையான்விரியும்படப்பாம்
பொருவாவிடையானுயர்ந்தான், மருவாரூ (677)

ரெற்றம்பலத்தானெனக்கொண்டானேத்துதில்லைச்
சிற்றம்பலத்தான்சிவபெருமா, ஞற்ற (678)

விடைமருதவாணனுல்கெல்லாமுடையா
னடையவிருப்பமமைத்த, மிடைசீர் (679)

மருதவட்டமான்மியம்போன்மற்றொன்றுண்டென்று
கருதவட்டஞாலத்துக்காணேன், கருதிதன்பால் (680)

வந்துபுகுந்தபதம்வான்பதமெல்லாம்புகுது
முந்துதெரிகண்ணிரண்டுமொன்றாகு, நந்திதனைக் (681)

---

* தவர் = வில்.

கும்பிட்டகையிரண்டுங்கூடவொவ்வோர்கைமேவ
நம்பிட்டம்வாய்க்கும்வகைநான்காகும். பம்பிதனு (682)
வித்தலத்துமான்மியமற்றெத்தலத்துமில்லைபயன்
கைத்தலத்துநெல்லிக்கனிகண்டாய், முத்தலமு (683)
நாடுமிதிற்பிறந்தநம்மாதவம்பெரிதாக்
கோடுமினியென்னகுறையுடையோ, மாடும் (684)
படியெடுத்தபாதமலர்பற்றிநாம்வாழ்தற்
கடியெடுத்தபேறீதலவோ, தொடிபுனைகை (685)
பாவியனுய்மேலுலகமாதரிப்பாரித்தலத்து
மேவியமர்கைவிரும்பாரோ, நாவிகமழ் (686)
வாசத்துறைமேலைவானதிதோய்வாரீங்குப்
பூசத்துறைதோய்தல்பூணாரோ, நேசமிக (687)
மான்றுற்றநெஞ்சமின்றிவான்சூழ்தல்காதலிப்போர்
தோன்றித்தலமொருகாற்சூழாரோ, வான்றவிண்ணின் ()
மூந்திருக்கைவேண்டிமுயலுவாரித்தலத்து
வந்திருக்கையோர்நாண்மதியாரோ நந்துதமை (689)
வானுடியம்பமதிப்பார்மருதாவென்
றேநாடியோர்காலியம்பாரோ, மானேயென் (690)
ஞேதுமளவிலுடையான்பொற்றேர்வரலு
மாதுபலரோடுமெகிழ்ந்தெழுந்தா, ளோது (691)
பெருமான்முன்சென்றுமிகுபெட்பிற்பணிந்தா,
ளொருமான்மதித்தபுரவோவித், திருமலர்மே (692)
னான்முகன்றேற்றுதநலமார்திருமேனி
யூன்முகமாங்கண்ணுலுறக்கண்டாண், மான்முகந்தா (693)
டேள்ளிமதவேடொடுத்தான்பலகணையஃ
துள்ளிவருந்தியுயிர்சோர்ந்தாள், வள்ளலெனச் (694)
சொற்றங்கைத்தொழுவார்சோரவருத்துகென்றே
வுற்றமதனுக்குயிரளித்தீர், செற்றகுயில் (695)
காதுமெனினீர்முன்கடிந்ததுபொய்யென்பார்மற்
றேதுபுகல்வாரிறையவரே, யோதுவீர் (696)
மோதுகடல்விடத்தைமுன்னடக்கினீரதற்கம்
மோதுகடலென்னைமுனியுமோ, போதுமதன் (697)
கைதைமலர்சீர்கடிந்தாலதற்காக
வெய்தெனவந்தென்னுயிரைவீட்டுமோ, பையரவுண் (698)

காதன்மதிநுஞ்சடிலக்காட்டிலிருந்தாலென்னை
வேதலியற்றவிதியுண்டோ, மீதார்ந் (699)

துறுமலைதீப்போற்காலுடன்றுவீசற்கோ
சிறுமுனியையவைத்தழகுசெய்தீர், மறுவிலா (700)

வாய்முத்தமென்னையழலாய்ச்சுடுவதற்கோ
வேய்முத்தமாகிவிளங்கினீர், தாயிற் (701)

சிறந்தபிரானென்றும்மைச்செப்புவார்தீயிற்
சிறந்தபிரானென்றென்னேசெப்பா, ரறந்தழுவும் (702)

வேயிடத்துநீர்முளைத்துமேம்பாடியற்றிலந்த
வேயெழுமோரோசைவெதுப்புமோ, நாயகரே (703)

யேறுநுமைத்தாங்குறினவ்வேற்றின்கழுத்துமணி
மாறுபுரிந்தென்னைவருத்துமோ, தேறும்வகை (704)

யந்திநிறநீரடைந்தாலதற்காவவ்
வந்திநிறமென்னையடர்ப்பதோ, முந்தவொரு (705)

வாழையடிநீர்மருவிலதுகுறித்தவ்
வாழைமுடியென்னைவருத்துமோ, காழ்பகையின் (706)

வாசநீரென்னைவருத்துமெனின்மற்றதற்காப்
பூசநீராடப்புகுவதோ, மூசு (707)

மயக்கமிதுதெளியமாண்பார்கோமுத்தி
நயக்குங்குருநமச்சிவாயன், வியக்கும் (708)

வரமணியென்றேயறிஞர்வாஞ்சித்திடுஞ்சுப்
பிரமணியதேசிகன்பாற்பேணித், திரமடைவே (709)

னன்னவனுநீரேயென்றான்றோருரைத்தக்கா
லென்னபுரிவேனிறையவரே, யன்னவன்போல் (710)

யோகியெனநீருறைந்திரல்லீர்சிறந்த
போகியெனவேபொலிந்துள்ளீர், போகியெனற் (711)

கென்னேவடையாளமென்றானும்பாகத்தாண்
மின்னேவலங்கரித்தவேறென்றே, முன்னயரே (712)

விண்ணைக்கடந்தமுடிமேலானுமைப்போலோர்
பெண்ணைச்சுமந்தமரும்பித்தரா, ரெண்ணேன் (713)

வலியவந்துமேல்விழுந்துமார்பினெழுந்து
பொலியுமுலைஞெமுங்கப்புல்வேன், பொலிய (714)

வொருத்தியிடப்பாகமுறவைத்திரற்றால்
வருத்தியதுபுரியமாட்டேன், றிருத்தி (715)

புரிந்தன் றிப்போகிலீர்போவீரோன்மேன்மேல்
விரிந்தபழிவந் துவிளையுந், தெரிந்தவரே (716)
யென் றுபுகல்போ திடைமருதவா ணரவ
ணின் றுகடவநெடுமெணித்தேர், துன் று (717)
நிலையுற்ற துதெரிந்துநெட்டுயிர்த்துக்கோடுஞ்
சிலையுற்றகண்ணிமனைச்சென்றா, ளுலையுற்ற (718)
தீயின்வெதும்பித்திகைத்தாண்மருதாரு
ளேயினுயலாகுமென்றமர்ந்தா, ளாயுமிளம் (719)
பேதைமுதலாகப்பேரிளம்பெண்ணீறாகக்
கோதையெழுவோருங்கொடிமறுகில், வாதை (720)
மயலடைந்துதேம்பிமறுகிச்சுழலுற்
றுயலடையப்போந்தானுலா, (721)

பேரிளம்பெண் முற்றியது. கண்ணி ௫௰௬,

திருவிடைமருதூர் உலா

முற்றிற்று.

உ

உலாவின் இலக்கணம்.

இளமைப் பருவமுற்றதலைமகனைக் குலம் குடிப்பிறப்பு மங்கலம் பரம்பரை இவற்றால் இன்னானென்பது தோன்றத் தலைமையாய் மாதர் நெருங்கிய வீதியினிடத்து அவன் பவனிவரப் பேதை முதலிய வேழுபருவப் பெண்களுங் கண்டு தொழ உலா வந்ததாக நேரிசைக்கலிவெண்பாவாற் கூறுவது,

இதற்குச் சூத்திரம்.

இலக்கண விளக்கப் பாட்டியல்.

குழமகனைக் கலிவெண்பாக் கொண்டு
விழைதொல் குடிமுதல் விளங்க வுரைத்தாங்
கிழைபுனை நல்லாரிவர் மணிமறுகின்
மற்றவன் பவனிவரவேழ்பருவ
முற்ற மானார் தொழப் போந்ததுலாவாம் (1)
ஐந்துமுதலேழாண்டும்பேதை (2)
எட்டுமுதனான் காண்டும்பெதும்பை (3)
ஆறிரண்டொன்றேயாகுமங்கை (4)
பதினான்காதிபத்தொன்பான்காறு
மெதிர்தருமடந்தைதமேலேயாறுமரிவை (5)
ஆறுதலையிட்டவிருபதின்மேலோ
ராறுந்தெரிவையெண்ணைந்துபேரிளம்பெண்ணென்
றேழுரும்பருவத்தோர்க்குரைத்தனரே. (6)

இப்பிரபந்தம்.

சாலிவாகனசகாப்தம் ௲அ௱௨௰௩-ல் நிகழாநின்ற சார்வரி-௵ மீனரவி ௰௩௳ சோமவாரம்சஷ்டிதிதி உரோசணி நட்சத்திரம் அமிர்தயோகம் இவைகள் கூடிய சுபதினத்தில் உறையூர் மதுரைநாயக முதலியாரவர்கள் குமாரர் சொக்கலிங்கமுதலியாரவர்களாற் பார்வையிடப்பட்டு ஆங்காங்குள்ள அரும்பொருள்விளக்கத்துடன் தஞ்சாவூர் இஞ்சினீராபீஸ் கிளர்க்கு த. இ. மகாதேவபிள்ளையவர்கள் வேண்டுகோளின்படி திருப்பரங்குன்றம் அருணாசலசரணர் குமாரர் நாராயணசரணரால் ஷை தஞ்சாவூர் பூரணசந்திரோதய அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

இதற்குமுன் அச்சிடப்பட்ட புத்தகங்ள்.

திருவிளையாடற்புராணம்.
திருப்பரங்கிரிப் புராணம்.
பிரபுலிங்கலீலை மூலம்.
மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி.
திரிகடுகம் மூலமும் உரையும்.
முதுமொழிக்காஞ்சி மூலமும் உரையும்.
பெரியநாயகியம்மை விருத்தம்.
பிக்ஷாடனநவமணிமாலை.
ஆசாரக்கோவை மூலமும் உரையும்.
சேக்கிழார்சுவாமிகள் பிள்ளைத்தமிழ்.

இனிமேல் அச்சிடப்படும் புத்தகங்கள்.

திருவானைக்காப்புராணம்.
திரிகடுகம் மூலமும் செய்யுளின் கருத்துரையும்.
கூளப்பநாயக்கன் காதல் துறையுடன்.
